பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு2030 மார்கழி 13 செவ்வாய்க்கிழமை(28-12-1999) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:28

## யாழ். புதிய தளபதி நேற்று பதவியேற்பு!

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ். குடாநாட்டு படைகளின் புதிய தளபதியாக நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் நிஹால் ஜெய்க்கொடி பலாலியில்நேற்று தமதுபொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார்.

புதுடில்லியில் உள்ள தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் ஒரு வருட விசேட இராணுவப் பயிற்சியை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய கையோடு அவருக்கு இந்தப் புதிய பதவிப் பொறுப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

யாழ். தளபதியாக இதுவரை பணியாற்றிய மேஜர் ஜெனரல் சரத்முன சிங்க சேவையில் இருந்து ஓய்வு பெறுவதை அடுத்தே இவர் புதிய தள பதியாக நியமிக்கப்பட்டார். (ஐ-3)

## 9 தற்கொலையாளிகள் தலைநகரில் ஊடுருவல்!

கொழும்பு,டிசெ.28

முக்கிய அரசியல் பிரமுகர்களை இலக்குவைத்து ஒன்பது தற்கொலைக் குண்டுதாரிகள் கொழும்பு நகருக்குள் ஊடுருவியுள்ளதாகத் தகவல் கிடைத் துள்ளது என்று பொலீஸ் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தகவலை அடுத்து தேடு தல்கள் தீவிரமாக்கப்பட்டுள்ளன என் றும் பொலீஸார் தெரிவித்தனர்.

அதே நேரம் -

புத்தாயிரம் ஆண்டு பிறப்புடன் பெருந்தாக்குதலை விடுதலைப்புலிகள் நடத்தக்கூடும் எனக் கிடைத்த தக வலை அடுத்து கொழும்பு நகரின் பாதுகாப்பு நேற்று முதல் இரட்டிப்பாக் கப்பட்டுள்ளதாகப் பொலீஸார் தெரி வித்தனர்.

கொழும்புக்குள் வரும் வாகனங் கள் கூடுதல் பரிசோதனைக்கு உட் படுத்தப்படும் என்றும் -

பொதுமக்களும் சோதனை செய் யப்படுவர் என்றும் -

இந்த நடைமுறை அடுத்த மாதம் வரை தொடரும் என்றும் -

பொலீஸ் தலைமையக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-3)

# இயக்கச்சியை ஊடுருவும் முயற்சி

# முறியடிப்பு என்கின்றது ராணுவம்!

## பலமுனைகளில் தீவிர தாக்குதல்

கொழும்பு,டிசெம்பர்28

**ஆனையிறவை அண்டிய பிரதேசங்களிலும், இயக்கச்சிப் பகுதியிலும் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே கடந்த இரு தினங் களாக கடுஞ்சண்டை நடைபெற்றிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் நட வடிக்கைத் தலைமையகம் அறிவித்திருக்கிறது.**

**இயக்கச்சிப் பகுதியில் படையினரின் முன்னணி அரண்களை ஊடறுத்துக் கொண்டு முன்னேற புலிகள் பல தடவைகள் மேற்கொண்ட முயற்சியை படையினர் முறியடித்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.**

தனங்களப்பு, கோயிலாக்கண்டி பகுதிகள் மீது பூநகரி கரையோரத்தில் இருந்தவாறே புலிகள் நடத்திய பீரங் கித் தாக்குதல்களை, பதில் பீரங்கித் தாக்குதல்களை நடத்தி படையினர் முறியடித்தனர் என்றும் கூறப்பட்டது.

இந்த இரு நாள் சண்டைகளில் தமது தரப்பில் 21 படையினர்உயிரிழந் ததாகவும் 78பேர்காயமடைந்ததாகவும்-

புலிகள் தரப்பில் எண்மர் கொல் லப்பட்டதாகவும் மேலும் 40பேர் உயி ரிழந்திருக்கலாம் அல்லது காயமடைந் திருக்கலாம் எனவும் -

களத்தில் உள்ள துருப்புகளின் தகவல்களின்படி புலிகள் தரப்பில் மேலும் பலர் காயமடைந்திருக்கலாம் எனவும் -

பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

## கரையோரப் பகுதிகள் மீது ஷெல் வீச்சு தொடர்கிறது

பூநகரிப்பக்கத்தில் இருந்து யாழ். கரையோரப்பகுதிகளை நோக்கி நேற் றும் ஷெல்தாக்குதல்கள் இடம்பெற் றன.

அரியாலை கிழக்கு, பூம்புகார், முள்ளி, செம்மணி ஆகிய பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. ஷெல் சத்தங்களால் யாழ்.நகரப்பகுதி அதிர்ந் தது.

கைதடி நுணாவில் பகுதிகளில் ஹெலியில் இருந்து எறிகுண்டுகள் வீசப்பட்டதாக அப்பகுதிப் பொதுமக் கள் தெரிவித்தனர்.

இதேவேளை - மண்டைதீவுக் கரையோரப்பகுதிகளில் நேற்று முற் பகல் 10க்கும் மேற்பட்ட ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

(ஐ-3-7-17-30-117)

## கேரதீவு, அறுகுவெளி பகுதிகளில் நேற்றும் கிபிர் குண்டு வீச்சு!

அரியாலை,டிசெ.28

கேரதீவு, அறுகுவெளி ஆகிய பகு திகளில் நேற்று இரண்டாவது நாளாக கிபிர் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

நேற்றுப்பிற்பகல் 3.30மணிக்கு கரையோரப் பகுதிகளை வட்டமிட்ட கிபிர் விமானங்கள் அடுத்தடுத்து குண் டுகளை வீசித் தாக்கின. இதனால் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரிய வில்லை.

இதேவேளை -

பரந்தனுக்கு அருகே புலிகளின் ஆட்லறி நிலைகள் மீது விமானக் குண்டு வீச்சு நடத்தப்பட்டதாக பாது காப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

(ஐ-3-17-30-15-117)

## உயிரிழந்த மேலும் 22 பேரின் விவரங்கள் புலிகள் அறிவிப்பு

வவுனியா,டிசெ.28

இயக்கச்சி, உமையாள்புரம் பகுதி களில் தொடரும் 'ஓயாதஅலைகள்-3' நடவடிக்கையின் போது தமது தரப் பில் 22 பேர் உயிரி[illegible]ததாக விடு தலைப் புலிகள் நேற்[illegible] அறிவித்த னர்.

அவர்களின் விவரம்:-

* நெல்லரசன் (நடராசா தவரஞ் சன் - யாழ்ப்பாணம்)
* இளையரசன் அல்லது இசை முத்து (வல்லிபுரம் குகதாசன் - யாழ்ப் பாணம்)
* கதிரொளி (கிருஷ்ணபாலன் சசிக்குமார் - யாழ்ப்பாணம்)
* பேரறிஞன் (தளையசிங்கம் சேந்தன் - யாழ்ப்பாணம்)
* பரணி (செல்லத்தம்பி வசந்தா தேவி - இயக்கச்சி)
* வீரச்சுடர் (அருள் ஜெகதீஸ் வரன் - புதுக்குடியிருப்பு)
* முத்து (தம்பிராசா செல்வன் - யாழ்ப்பாணம்)
* புரட்சி அரசன் (ராதாகிருஷ் ணன் ஜெயப்பிரகாஷ் - ஒட்டுசுட்டான்)
* புரட்சிக்குமரன் (சின்னத்துரை சந்திரவதனன் - யாழ்ப்பாணம்)
* சுகாநந்தம் (சேராளசிங்கம் விக் னராஜா - மட்டக்களப்பு)

(10ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞர்கள் மூவரும் விடுவிப்பு

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தி னம் படையினரால் கைதுசெய்யப்பட்ட மூன்று இளைஞர்களும் யாழ். நகரில் உள்ள 512ஆவது பிரிகேட் தலை மையகத்தில் வைத்து நேற்று விடு தலை செய்யப்பட்டு அவர்களது பிரிவு கிராம அலுவலர்களிடம் ஒப்படைக்கப் பட்டனர்.

நல்லூர் தெற்கைச்சேர்ந்த குமார சாமி ராஜேந்திரன் (வயது29), யாழ். வேம்படி வீதியில் உள்ள தையல் கடையின் உரிமையாளரான மகாலிங் கம் சுரேஸ்(வயது31),அங்கு பணிபுரி யும் தர்மலிங்கம் விஜயகுமார் (வயது 22) ஆகியோரே விடுவிக்கப்பட்டனர் என ஈ.பி.டி.பி. யினர் தெரிவித்தனர்.

### கைது

திருகோணமலை மர்வட்டத்தில் பணிபுரியும் படை உயர்அதிகாரியைக் கொலைசெய்யும் திட்டத்துடன் வந்த தற்கொலைப் படையைச் சேர்ந்த ஒரு வரைக் கைது செய்துள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

அவர் கைது செய்யப்பட்ட சமயம் அவரிடமிருந்து பிஸ்டல் ஒன்றும் கைப் பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## வவுனியாவில் கிளைமோருக்கு 3 பொலீஸார் பலி

வவுனியா,டிசெ.28

வவுனியா - மன்னார் வீதியில் வாரிக்குட்டியூர் என்ற இடத்தில் நேற் றுக்காலை 10மணியளவில் சைக்கி ளில் ரோந்து சென்ற பொலீஸார் கிளைமோரில் சிக்கினர்.

இத் தாக்குதில் 3 பொலீஸார் உயிரிழந்தனர். அவர்களின் சடலங் கள் வவுனியா ஆஸ்பத்திரியில் வைக் கப்பட்டுள்ளன.

(ஐ-3-6)

### குண்டுத் தாக்குதல் விசாரணைக்கு

## வெளிநாட்டு நிபுணர்களின் உதவி பெற அரசு முடிவு

கொழும்பு நகரமண்டப வளாகத்தி லும், ஜா-எலவிலும் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான விசாரணைக்கு வெளிநாட்டு நிபுணர்க ளின் உதவியைப் பெற்றுக்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது.

பொலீஸ்மா அதிபர் லக்கிகொடித் துவக்கு இதனைத் தெரிவித்தார்.

இவ்விரு குண்டு வெடிப்புச் சம்ப வங்கள் தொடர்பாகவும் பொலீஸா ரும், குற்றதடுப்புப் பிரிவினரும் தற் போது விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு விடுவிக்கப் பட்ட கோரிக்கையை ஏற்றுக்கொண்ட வெளிநாட்டு நிபுணர் குழு ஒன்று அடுத்த மாத முற்பகுதியில் கொழும் புக்கு வருகைதர உள்ளதாகவும் தெரி விக்கபட்டது.

இவர்கள் எந்த நாட்டில் இருந்து வருகின்றனர் என்ற விவரம் தெரிவிக் கப்பட்டவில்லை. (ஐ-7)

### கொழும்பு நகர மண்டப வளாகத்தில்

## குண்டு வெடிப்பதற்கு முன்னர் அப்பகுதிக்கு வந்த ஆயுதக் கும்பல்

கொழும்பு,டிசெ.28

கொழும்பு நகரமண்டப வளாகத் தில் கடந்த 18ஆம் திகதி ஜனாதிபதி பங்குபற்றிய கூட்டத்தில்குண்டு வெடிப் பதற்கு முன்னர் ஆயுதபாணிகளாக வந்த கும்பல் ஒன்று நுழைவாயிலில் அட்டகாசம் புரிந்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனு ருத்த ரத்வத்தவின் மகனின் தலை மையில் வந்த குழுவே அங்கு ரகளை செய்ததாகப் பொலீஸார் தெரிவித்த னர்.

இந்தக் குழுவினர் நுழைவாயிலில் குழப்பத்தை ஏற்படுத்திய சமயம் அச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தற் கொலைக் குண்டுதாரி வளாகத்துக் குள் ஊடுருவியிருக்கலாம் என்ற சந் தேகம் பொலீஸாரிடம் ஏற்பட்டிருப்பதா கவும் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டம் நடைபெற்ற இடத்துக்கு அனுருத்தவின் மகன் லோஹான் ரத் வத்த தமது சகபாடிகளுடன் ஆயுத பாணிகளாக வந்ததாகவும் -

நுழைவாயிலில் நின்ற ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் அவர்களைச் சோதனைசெய்ய முனைந்ததாகவும் -

அதற்கு மறுப்புத் தெரிவித்து அவர் கள் அங்கு நின்று அட்டகாசம் புரிந்த தாகவும் -

அச்சமயம் தற்கொலைக் குண்டு தாரி வளாகத்துக்குள் நுழைந்திருக் கக்கூடும் என்றும் - பொலீஸார் தெரி வித்தனர்.

இதேவேளை -

பாதாள உலகக் குழு ஒன்று தற் கொலைக் குண்டுதாரிக்கு உதவியி ருக்கக்கூடும் என்ற சந்தேகமும் எழுந் துள்ளதாகப் பொலீஸார் கூறினர்.

அதேசமயம் - அன்றைய கூட்டத் தின்போது படம் எடுத்த படப்பிடிப்பா ளர்களின் படச்சுருள்களை விசார ணைக்காக இரகசியப்பொலீஸார் பெற் றுள்ளனர். (ஐ-3)

## தேசிய அரசு அமைக்கும் திட்டத்தை ஆதரிப்பதில்லை என ஐ.தே.க. முடிவு

கொழும்பு,டிசெ.28

அரசாங்கம் முன்வைத்துள்ள தேசிய அரசுஅமைக்கும் திட்டத்துக்கு ஆதரவு வழங்குவதில்லை என்று ஐ.தே.கவின் செயற்குழு நேற்று முடிவு செய்தது.

கட்சியின் தலைவர்ரணில்விக்கிரம சிங்கவின்தலைமையில் நேற்றுக்கூடிய செயற்குழு பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்ந்து இந்த முடிவை எடுத்துள்ளது.

தேசியஅரசாங்கத்தில் இணைவது இல்லை என்றும் -

அரசாங்கம் முன்வைக்கும் திட்டத் தைப் பரிசீலனைசெய்து அது பயனுள் ளதாக இருக்கும் பட்சத்தில் வெளியில் இருந்து அதற்கு ஆதரவு வழங்குவது என்றும் -

கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலின் போது இடம்பெற்ற மோசடிகள் மற்றும் வன் செயல்கள் காரணமாகவே கட்சிக்கு தேர்தலில் தோல்வி ஏற்பட்டதாக அங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

(ஐ-3)

## தாழையடியில் சிக்குண்டோர் அங்கிருந்து வெளியேற அனுமதி

தென்மராட்சி,டிசெ.28

வடமராட்சி கிழக்கில் தாழையடி அரசினர் மருந்தகத்தில் தடுத்து வைக் கப்பட்டிருந்த 500க்கும் மேற்பட்ட அகதிகள் விரும்பிய இடங்களுக்குச் செல்லப் படையினர் நேற்று முன்தினம் அனுமதி வழங்கினர்.

வத்திராயனில் இருந்து கடந்த 15ஆம் திகதி இடம்பெயர்ந்த சுமார் 500பேர் செம்பியன்பற்று, மாமுனை ஆகிய பகுதிகளுக்குச் செல்ல விருப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை மாணவர்கள்

# சீசன் ரிக்கெட் பெறுவதற்கு விண்ணப்பிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 28

அடுத்தமாதத்துக்கானபருவ காலச் சீட்டுக்களைப் பெற விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்பாக பாடசாலை அதிபர்கள் மூலம் - தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவேண்டும் என வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதற்கு ஏதுவாக பாடசாலை அதிபர்களுக்கு மாணவர்கள், பெற்றோர்கள் ஒத்துழைப்பு நல்கி பருவச் சீட்டுக்குரிய கட்டணத்தையும் மாணவர்களின் சுயவிவரங்களையும் உரிய தினத்துக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் பொதுமுகாமையாளர் கேட்டுள்ளார். (ஐ-7)

## ஆங்கில ஆசிரியர் தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ. 28

தென்மராட்சி கல்வி வலய பகுதிநேர ஆங்கில ஆசிரியர் தெரிவிற்கான பரீட்சை நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9-30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஐ-133)

புத்தாயிரமாண்டில் உங்கள் இல்லங்களில் ஏற்றிய தீபமாக விளங்க
இதோ வெளிவந்துவிட்டது!
தீபம்
வாக்கிய பஞ்சாங்க கலண்டர் 2000
விலை ரூபா 95.00
முதன்மை - முழுமை - புதுமை
2000 ஆம் ஆண்டுக்கான சகலவிதமான டயறிகள், கலண்டர்கள் என்பனவும் வெளிவந்து விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.
வாடிக்கையாளர்கள், வியாபாரிகள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
சிவன் மாளிகை லிமிடெட்,
இல.166, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2996
(72138)

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆலயத்தின் முன்னாள் பூசகர்

**பிரம்மஸ்ரீ நடராசா குருக்கள் ரவீந்திரசர்மா**

அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீபழநிஆண்டவர் பரிபாலன சபை
டச்சு வீதி, சாவகச்சேரி.

(சி/10353)

## அகவை ஒன்று ஆனபோதும்...



தோற்றம்: 12 — 12 — 1969

மறைவு: 28 — 12 — 1998

**செல்வன் செல்லத்துரை கருணவேல்**

ஆண்டொன்று உருண்டோடி
முடிவானது
ஆனாலும் எம் சோகம்
முடியாதது
நீ சென்ற சில நாள்கள்
யுகமானது – எம்
நெஞ்சுக்குள் நிழலாடும்
உன் முகமானது
நோய் என்ன நீ சென்ற
நோக்கம் என்ன?
நீ இல்லா நிஜக் கண்ணில்
தூக்கம் என்ன?

- அரியாலை நண்பர்கள்

(72136)

## நிவாரணத்தை வெள்ளிக்கு முன் பெறுமாறு தெரிவிப்பு

அரியாலை, டிசெ. 28

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகள் ஊடாக வழங்கப்பட்டு வரும் இடம்பெயர்ந்தோருக்கான 82 ஆவது 'ஏ' 'பி' புள்ளிகளுக்குரிய நிவாரணப் பொருள்களை எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாகப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வருட இறுதி கணக்கெடுப்பு மற்றும் இருப்பெடுப்பு என்பவற்றை மேற்கொள்ள வசதியாகவே நிவாரணப் பொருள்களை 31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு சங்கத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார். (ஐ-17)

## வயோதிபப் பெண் மரணம்

நெல்லியடி, டிசெ. 28

உணவு அருந்திக் கொண்டிருந்த சமயம் மூச்சுக்குழல் வாயினுள் சோறு உட்சென்றதனால் வயோதிபப் பெண் ஒருவர் மூச்சுத் திணறி மரணமானார்.

புறாப்பொறுக்கி ஆலடியைச் சேர்ந்த மயில்வாகனம் தங்கம்மா (வயது 60) என்பவரே கடந்த வெள்ளிக்கிழமை இரவு மரணமாகியுள்ளார்.

முதல் நாள் இரவு இவர் சோறு உண்டு கொண்டிருந்த சமயம், தவறுதலாக சோறு மூச்சுக்குழல் வாயினுள் சென்றதனால், உடனடியாக மந்திகை மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டு பின்னர் யாழ். போதனா மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு அவர் மரணமானதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-109)

## களஞ்சிய திறப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ. 28

பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டிலிருந்து புனரமைக்கப்பட்ட நாரந்தனை பசளைக் களஞ்சியத் திறப்பு விழா நாளை புதன் கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் களஞ்சியத்தைத் திறந்து வைப்பார். (ஐ-3)

லிபேட்டி அச்சுவேலி
பிரசாந்த், கௌசல்யா
நடித்த
ஆசையில்
ஓர் கடிதம்
[புதிய வெளியீடு]
காட்சிகள்: 10.30 2.30
T. P. 070-212223
070-212678
[72078]

நாகம்ஸ்
சுன்னாகம்
கார்த்திக்,
பானுப்பிரியா
நடித்த
கோபுர வாசலிலே
காட்சிகள்: 10.30, 2.30
(புதிய நேரம்)
[72039]

ராஜா
யாழ்ப்பாணம்
விஜய் - ஷாலினி
மற்றும்
பலர் நடித்த
காதலுக்கு
மரியாதை
10.30, 2.30
[சி/10316]

# மரண அறிவித்தல்கள்

## நமசிவாயம் வாதவூரர்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் நமசிவாயம் வாதவூரர் நேற்று 27-12-1999 இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம்— செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், ஓய்வு பெற்ற ஆசிரியை நவமணியின் அன்புக் கணவரும், வைத்திய கலாநிதி சம்பூரணராணி (மகிந்தன் கிளினிக், அளவெட்டி), கலாதரன் (ஆள்பதிவுத் திணைக்களம், யாழ்ப்பாணம்), லோகாதரன், காலஞ்சென்ற திவாகரன், தயாபரன் (மில்கோ பால் நிறுவனம், கந்தளாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வைத்திய கலாநிதி கிருஷ்ணராசா (டாக்டர் ஆ. நடராசா சுதேச வைத்தியசாலை, சுன்னாகம்), ஜெகதாம்பிகை (ஆசிரியை யா / செங்குந்த இந்துக்கல்லூரி திருநெல்வேலி), லலிதாம்பிகை, ரமணி (ஆசிரியை, திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், மகிந்தன், கஜந்தன், அமுதா, நிஜந்தன், லவனி, சகாஜினி, பிரதாபன், சஜிதா, தாரணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 28-12-99 காலை 10.00 மணிக்கு மாவிலங்கை, அளவெட்டி வடக்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்**

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

(72118)

## திருநாவுக்கரசு சிவராசா

(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/ இந்துக்கல்லூரி)

யாழ்ப்பாணம் கொட்டடியைப் பிறப்பிடமாகவும் மிருசுவில் படித்தமகளிர் திட்டத்தை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு சிவராசா 25—12—99 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மனோரஞ்சிதம் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஸ்ரீ வெங்கடேஷனின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு தனநாயகத்தின் அன்புச் சகோதரரும், தனலெட்சுமி தனநாயகம், தனேந்திரம், திருமதி தனேஸ்வரி, சரவணலிங்கம், திருமதி தனயோகம் ஆறுமுகம் ஆகியோரின் சிறியதகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 26-12-99 ஞாயிற்றுக்கிழமை எழுதுமட்டுவாழ் பொதுமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்
**திருமதி தனேஸ்வரி சரவணலிங்கம்**
(பெறாமகள்)

படித்தமகளிர்திட்டம்,
மிருசுவில்

(72128)

## கதிரவேலு தம்பிப்பிள்ளை

( ஓய்வுபெற்ற ஊழியர், கொழும்பு துறைமுகம் )

புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சங்கத்தகேணியை வசிப்பிடமாகவும் தற்போது கந்தர்மடம் மணல்தறை ஒழுங்கையில் வசித்தவருமாகிய கதிரவேலு தம்பிப்பிள்ளை அவர்கள் நேற்று ( 27 - 12 - 99 ) அதிகாலையில் சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற கனகலெட்சுமியின் அன்புக் கணவரும் நாகேஸ்வரன் ( பிரான்ஸ் ), தனபாக்கிய லெட்சுமி (தனம்), தயானந்தன் ( சுவிஸ் ), தயாளன் ( நியூ லங்கா றேடர்ஸ், யாழ்ப்பாணம் ), தயாளினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சறோசா (பிரான்ஸ்), மன்மதராஜா (ஓய்வு பெற்ற நில அளவை உதவியாளர்), சாந்தினி (சுவிஸ்), சிறீரூபன் ( சுவிஸ் ) ஆகியோரின் மாமனாரும் தினேஸ், திவியா (பிரான்ஸ்), அஜந்தா, பபிதா, யசிந்தா ஆகியோரின் பேரனும் காலஞ் சென்ற கந்தையா, பறுவதம் ( கொழும்பு ). காலஞ் சென்ற ஆறுமுகம், செல்லம்மா ( இந்தியா ), காலஞ் சென்ற கண்ணம்மா, சின்னம்மா (இந்தியா), தையல்முத்து ( சின்னத்தங்கச்சி ), சிவகாமிப்பிள்ளை ( பிள்ளையம்மா – பிரான்ஸ் ) ஆகியோரின் சகோதரரும் தங்கரெத்தினம், அருளையா (கொழும்பு), காலஞ்சென்ற இராசம்மா ஆகியோரின் மைத்துனரும் சாந்தலிங்கத்தின் (வர்த்தகர், கொய்யாத்தோட்டம் – தலைவர், வர்த்தகர் சங்கம், கொழும்புத்துறை ) சிறிய தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-12-99) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காகக் கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**ச. மன்மதராஜா**
(மருமகன்)
**த. தயாளன்**
( மகன் )

28/18, மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம்.

(72137)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமானக் கடத்தல் நாடகம்

# தீவிரவாதிகளுடன் பேச அதிகாரிகள் விரைவு!

புதுடில்லி, டிசெ. 28

கடந்த வெள்ளியன்று கடத்தப்பட்டு ஆப்கானிஸ்தானில் கண்டகார் விமானநிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ள இந்தியன் எயார்லைன்ஸ் விமானத்தில் இருந்து பயணிகளை விடுவிப்பது தொடர்பாக தீவிரவாதிகளுடன் பேசுவதற்காக இந்திய அதிகாரிகள் குழு ஒன்று விசேட விமானத்தில் நேற்று புறப்பட்டது.

அந்த விமானத்தில் அதிகாரிகளுடன் பயணிகளுக்கான உணவு, மருந்து, கம்பளி என்பனவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வெளியுறவுத் துறை அமைச்சர் ஜஸ்வந்சிங் தெரிவித்தார்.

அதேசமயம்—

தமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நேற்று பிற்பகல் 2 மணி வரை (இந்திய நேரப்படி) இந்திய

உலக அரங்கில்

அரசுக்கு தீவிரவாதிகள் காலக்கெடு வழங்கியதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

காலக் கெடுவுக்குள் கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் பயணிகளைக் கொல்லத் தொடங்கப்போவதாக அவர்கள் தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் அந்த விமானத்துக்கு எரிபொருள் நிரப்பப்பட்டுள்ளது. விமானத்தை ஆப்கானிஸ்தானை விட்டு வெளியே கொண்டு செல்லுமாறும் தலிபான் அதிகாரிகள் விமானிக்கு உத்தரவிட்டுள்ளனர். எனினும் விமானத்தில் கோளாறு ஏற்பட்டுள்ளதாக விமானி கூறி உள்ளார். (இ-6)

# இந்திய முன்னாள் ஜனாதிபதியின் இறுதிக் கிரியைகள் இன்று

## 7 நாள் துக்கம் அறிவிப்பு

இந்திய முன்னாள் ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மாவின் மறைவை அடுத்து நாடுமுழுவதும்7 நாள் துக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் இன்று அரச மரியாதைகளுடன் நடைபெறும்.

82 வயதான டாக்டர் சங்கர் தயாள் சர்மா கடந்த மூன்று மாதங்களாக நுரையீரல் கோளாறுகளுக்காகப் புதுடில்லி தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்தார். நேற்று முன்தினமிரவு 10. 32 மணிக்கு அவரது உயிர் பிரிந்ததாக அறிவிக்கப்பட்டது.

அவரது மறைவுக்குப் பிரதமர் வாஜ்பாய், ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் உட்பட இந்தியத் தலைவர்கள் பலர் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளனர்.

டாக்டர் சர்மா போபால் மற்றும் மத்திய பிரதேச மாநில காங்கிரஸ் கட்சிகளின் தலைவராகப் பணியாற்றி உள்ளார். 1987 இல் துணை ஜனாதிபதியான சர்மா 1992 ஆம் ஆண்டில் ஜனாதிபதியானார்.

## கியூபா விமானம் விபத்தில்

கியூபாவின் மேற்குப் பிரதேசத்தில் கியுபென் எயார் லைன்ஸ் விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 27 பேரும் உயிரிழந்தனர்.

இந்த விமான விபத்துக்குரிய காரணம் என்ன என்பது குறித்த விவரம் ஏதும் வெளியிடப்படவில்லை.

# சவூதியில் இரு வாரங்களில் ஆயிரம் பிச்சைக்காரர் கைது

றியாட், டிசெ. 28

சவூதி அரேபியாவில் கடந்த இரு வார காலமாக பொலீஸார் நடத்திய தேடுதல்களில் ஆயிரத்துக்குமேற்பட்ட பிச்சைக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இஸ்லாமியர்களின் புனித நகரான மெக்காவில் நடைபெற்ற தேடுதல்களின் போது 327 பிச்சைக்காரர்களும் ஜெட்டா நகரில் இடம் பெற்ற தேடுதல்களில் 675 பிச்சைக்காரர்களும் கைது செய்யப்பட்டனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் வெளிநாட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

புனித ஹஜ் யாத்திரைக்காக வரும் யாத்திரிகர்களிடம் பிச்சை எடுப்பதற்காக இவர்கள் அங்கு கூடி இருக்கலாம் என்றும் பொலீஸார் தெரிவித்தனர். (இ-6-4)

# இறந்த மகனின் விந்து மூலம் பேரக் குழந்தை பெற முயற்சி

லண்டன், டிசெ. 28

இறந்துபோன தமது மகனின் விந்து அணுவைக் கொண்டு வாடகைத் தாய் மூலம் பேரக் குழந்தை ஒன்றைப் பெற்றெடுப்பதற்கு பிரிட்டனில் உள்ள ஒரு தம்பதியர் முயற்சி செய்து வருகின்றனர்.

இறந்த கணவரின் விந்தினைக் கொண்டு குழந்தை ஒன்றைப் பெறுவதற்கு அவரது மனைவி — நீண்டகாலமாக போராடிய பின்னர்— அண்மையில் நீதிமன்றின் அனுமதியைப் பெற்றிருந்தார். இதனை அடுத்தே தற்போது தமது மகனின் விந்தினைக் கொண்டு வாடகைத் தாய் மூலம் பேரக் குழந்தை ஒன்றைப் பெறுவதற்கு போரிஸ்மித்— நடாஷா தம்பதிகள் முயன்று வருகின்றனர். இதற்காக அவர்கள் நீதிமன்றின் உதவியையும் நாடி உள்ளனர்.

போரிஸ்மித் தம்பதிகளின் ஒரே மகனான லான்ஸ் ஸ்மித் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வீதி விபத்து ஒன்றில் உயிரிழந்தார்.

இறப்பதற்கு முன்னர் அவர் தனது மரணத்துக்குப் பின்னர் தன் உடலிலிருந்து விந்துவை எடுத்து செயற்கை முறையில் குழந்தை பெறலாம் என்று எழுத்து மூலம் குறிப்பிட்டிருந்தார். அதற்கமைய அவரது பெற்றோர்கள் லான்ஸ் ஸ்மித்தின் விந்துவை எடுத்து அரசாங்க விந்துப் பாதுகாப்பு மையத்தில்பத்திரப்படுத்தி வைத்திருந்தனர்.

தற்போது அந்த விந்தைப் பயன்படுத்தி வாடகைத் தாய் ஒருவர் மூலம் பேரக் குழந்தை பெறுவதற்கு போரிஸ்மித் தம்பதிகள் முயன்று வருகின்றனர். (இ-6-4)

பியர் பிரியர்களே!

புதிய யுகத்துக்கு புதிய ருசி

யுனைட்டற் புறூவரிஸ் லங்கா லிமிட்டெற் நிறுவனத்தாரின்
சர்வதேச தரம் வாய்ந்த உற்பத்திப் பொருள்கள்

- கிங்ஸ் லாகர் (KINGS LAGER)
- கிங்ஸ் பில்ஸ்னர் (KINGS PILSNER)
- பைசன் எக்ஸ்ரா லாகர் (BISON XXX TRA LAGER)
- கிங்ஸ் எக்ஸ்ரா ஸ்ட்ரோங் ஸ்டவுட் (KINGS EXTRA STRONG STOUT)

சகல மதுபானக் கடைகளிலும் கிடைக்கும்.

ஏக விநியோகத்தர்கள்:

வாமஸ்

121/2. மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொ. பே. இல. 2989

(சி-10355)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகன் தேவை

34 வயது இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பாவமற்ற விஞ்ஞான ஆசிரியைக்கு மணமகன் தேவை. விளம்பர இல. 986, மே/பா.உதயன். (72101)

## விற்பனைக்கு

45 நாள்கள் நிரம்பிய அழகிய ஜெர்மன் சேப்பேட் மற்றும் 45 நாள்கள் நிரம்பிய ஐரிஸ் அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- இல- 42/01 A, கல்லூரி வீதி, நிராவியடி, யாழ்ப்பாணம். [72104]

## திருமணசேவை

எம்மிடம் எல்லா மதத்திலும் மணமக்கள் உள்ளனர். பழைய தொடர்பு உள்ளவர்கள் நேரில் சந்திக்கவும். தொடர்புகளுக்கு: துர்க்கா திருமணசேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். T.P.NO.-021-3383 [72112]

## தவறிவிட்டது

கோண்டாவில் மேற்கு கோண்டவிலைச் சேர்ந்த சக்திவேல் கஜநாத் என்பவரது தேசிய அ.அ (இல. 812081543 V) யும், விசேட அ.அ (இல. 0907004650) யும் பாடசாலை அடையாள அட்டை என்பன ஆஸ்பத்திரி வீதிக்கும் கன்னாதிட்டிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஸ்ரீ சக்தி வைத்தியசாலை, மானிப்பாய் வீதி, உடுவில் என்ற விலாசத்திற்கு ஒப்படைத்து உதவவும். (72106)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி, கல் பேட்ஸ் மொத்தமாகவும், சில்லறையாகவும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: மல்லிகாபதி, ஆஸ்பத்திரிமுன்பாக, மானிப்பாய், T. P, NO- 2887. (69482)

## அதிகரிப்பு

இம் மாதம் 20 நாள்களில் மட்டும் 39 பேர் நாயினால் கடியுண்டுகோப்பாய் ஆஸ்பத்திரியில்சிகிச்சைபெற்றுள்ளனர்

இப்பகுதியில் நாயினால் கடியுண்ட 39 பேரில் கட்டாக்காலி நாய்களினால் கடியுண்டவர்களின் எண்ணிக்கையே அதிகம் ஆகும். (இ-180)

---

# A/L DAY CLASS

ஆரம்பம்: 3 - 1 - 2000 காலை 8 மணி

**புதிய உயர்கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்.

(72110)

---

நகரசபை, சாவகச்சேரி.

# 2000 ஆம் ஆண்டுக்கான சொத்து வரி

சாவகச்சேரி நகரசபையின் (255 ஆம் அத்தியாயமான) நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அதற்கு உரிமையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சார்பில் பின் வருமாறு முடிவு செய்திருப்பதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1. அடுத்துத் திருத்தப்படியாக முன் கூறிய கட்டளைச் சட்டத்தின் 166 ஆம் பிரிவின் 1999 ஆம் ஆண்டுக்கான பெறுமான மதிப்பீட்டை அல்லது சோலை வரி மதிப்பீட்டை குறிப்பிட்ட விடயங்களில் அவசியமெனக் கருதப்படக் கூடியதாக அத்தகைய திருத்தங்களுடன் 2000 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடாக அல்லது சோலைவரி மதிப்பீடாக ஏற்றுக் கொள்க.
2. முற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 169 ஆம் பிரிவின்படி சாவகச்சேரி நகர சபையின் பரிபாலன எல்லைக்குள் 1999 ஆம் ஆண்டில் நடைமுறையில் இருந்து வரும் வரிவிகிதத்தை 2000 ஆம் ஆண்டிலும் அவ்வாறே உண்டு பண்ணவும், விதிக்கவும்-
   - (அ) கட்டளைச் சட்டத்தின் 160 (3) பிரிவின் நியதிப்படி சாவகச்சேரி நகரசபையின் பரிபாலன எல்லைக்குட்பட்டு அமைந்திருக்கும் நெற் காணிகள் தவிர்ந்த சகல அசையாச் சொத்துக்களிலிருந்தும் வருடாந்தப் பெறுமதியின் 10% மான வரியொன்றினை 2000 ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, ஜூலை 30, செப்ரெம்பர் 30, டிசெம்பர் 31 ஆகிய திகதிகளிலோ அல்லது அதற்கு முன் போ நான்கு கந்தாயத் தவணைகள் மூலம் செலுத்தப்படல் வேண்டும்.
3. 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த விகிதங்கள் முழுமையாகச் செலுத்தப்பட்டால் 10% கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் விகித வருமதியாகவுள்ள அக்கந்தாயத்துக்குரிய முதல் மாதத்துக்குள்ளாக கந்தாய விகிதம் செலுத்தப்பட்டால் 5% கழிவும் அனுமதிக்கப்படும்.
4. மேற் சொல்லப்பட்ட பந்தி 2 (அ) வின்படி சொல்லப்பட்ட காலங்களில் விகிதங்கள் செலுத்தப்படாதவிடத்து வதிவிடங்கள் மீது 15% மும் மற்றும் ஏனைய இடங்கள் மீது 20% மும் விறாந்துச் செலவு அறவிடப்படும்.
5. ஆதனவரி சார்பான ஆட்சேபனைகள் 31 - 01 - 2000 திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**மு. செ. சரவணபவ**
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,.
சாவகச்சேரி,
16-12-99

(சி-10345)

---

# விற்பனையாகின்றன!

# லீலா — 2000

சித்திரக் கலண்டரில் முன்னோடிகளான

## லீலாவின்

- சித்திர பஞ்சாங்க நாள் கலண்டர்கள்
- பஞ்சாங்க மாத கலண்டர்கள்

உங்கள் தேவைகளுக்கு

**உதயன் பணிமனை**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

# G.A.Q., 1st in Com. வெளிவாரி

## (யாழ்., பேராதனை, கிழக்கிலங்கை பல்கலைக்கழகம்)

- ★ A/L இல் 3 பாடங்கள் (கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம்) சித்தி அடைந்தவர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்கலாம்.
- ★ விண்ணப்பப் படிவங்கள், விவரங்களை இலவசமாக நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
- ★ இதற்குரிய பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தால் செய்து தரப்படும்,
- ★ இதற்குரிய விரிவுரைகள் ஆரம்பம் 01 - 01 - 2000

விவரங்களுக்கு:
S. அருள் நங்கை

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி - யாழ்.
(72019)

---

# வேணுகா ரெலிகொம் சேவிஸ்

இன்று சேவையில் முதலாவது ஆண்டை பூர்த்தி செய்கிறது வேணுகா தொலைத் தொடர்பு நிலையம். இதனையொட்டி வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்களுக்கு வெளியில் இருந்துவரும் அழைப்புகளுக்கு இன்று கட்டணம் அறவிடப்படமாட்டாது.

T.P. 0094 212541
0094 212845

## வேணுகா ரெலிகொம் சேவிஸ்

964, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

கிளை நிறுவனம்
நவாலி.

(72127)

---

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ். கிளை
வலி. வடக்குப் பிரிவு

# அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1 ஆம் பரிசுக்குரிய இலக்கம் — 3992
2 ஆம் பரிசுக்குரிய இலக்கம் — 1539
3 ஆம் பரிசுக்குரிய இலக்கம் — 0669

ஆறுதல் பரிசுகள்

1) 0883 2) 3200 3) 4249
4) 2649 5) 2737

பரிசுப் பொருள்களை 31—12—99 - ற்கு முன்னர் பிரிவுக் காரியாலயத்தில் நண்பகல் 12.00 மணிக்குள் பெற்றுக்கொள்ளவும். ஆதரவு நல்கியோருக்கும் அன்பளிப்புகள் வழங்கியோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

-- கௌரவ நிர்வாகத்தவர்கள்

(72122)

---

# கண்ணீர் அஞ்சலி

26—12—99 அன்று காலமான எமது சகமாணவி

## செல்வி சிவகலா சிவராஜசிங்கம்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

பிரிவால் துயருறும்
உரும்பிராய் லோகா ரியூசன் சென்ரர்
மாணவ மாணவிகள்.

(72124)

---

# 31-ம் நாள் மோட்ச தீப, சபிண்டிகரண அழைப்பு

பிறப்பு 12 10 1925



இறப்பு 29 11 1999

அமரர்

## வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை

ஐயா தாத்தா பிள்ளை பெத்தப்பா
மாமா குஞ்சி யப்பு எங்கள் அப்பா
மெய்யாய் அழைத்த! நாள் பொய்த்து
மேதினியை விட்டு மேவினீரோ ஐயா.

29-12-99 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் மோட்ச தீப, சபிண்டீகரண நிகழ்வில் பங்குகொள்ளுமாறு அன்பிற்கினியவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

"மணலியடி",
கப்புதூ,
கரவெட்டி.

(72123)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அரசுக்கு ஆதரவளித்த தமிழ்க்கட்சிகள்

# தீர்வு காண முயற்சிக்கவில்லை; பார்வையாளராகவே இருந்துள்ளன

## சந்திரசேகரம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 28

**கடந்த ஐந்து வருடகாலமாக அரசுக்கு ஆதரவு வழங்கி வந்த தமிழ்க்கட்சிகள் பார்வையாளர்களாக இருந்தனவே தவிர தமிழ் மக்கள் பிரச்சினையைத் தீர்க்க எதுவும் செய்யவில்லை. இன்று அநாதரவான நிலையில் உள்ள தமிழ்மக்களின் பிரச்சினைக்கு தீர்வு முயற்சிகளை மேற்கொள்ள கட்சிச்சார்பற்ற வகையில் அமைப்பு ஒன்றைஆரம்பிக்க முனைந்துள்ளோம்.**

முன்னாள் பிரதி அமைச்சரும், மலையக மக்கள் முன்னணித் தலைவருமான பெ. சந்திரசேகரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகியன இணைந்த அரசியல் குழு ஒன்றை அமைக்க எடுக்கப்படும் முயற்சிகள் குறித்து கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு உதயனுக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கடந்த ஐந்து வருட கால ஆட்சியில் நம்பிக்கை இழந்திருந்த தமிழ் மக்கள் அரசுக்கு எதிராக தமது அதிருப்தியை வெளிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி தேர்தலைப் பயன்படுத்தினர். அவர்கள் அரசுக்கு எதிராக ஐ.தே.கவுக்கு வாக்களித்தனர். ஆனால் அது ஆளும் கட்சியாக வரவில்லை.

இதனால் இன்று தமிழ் மக்கள் அநாதரவாக விடப்பட்டுள்ளனர்.

கடந்த ஆட்சிக் காலத்தில் அரசுக்கு ஆதரவு அளித்து வந்த தமிழ்க் கட்சிகளாலும் எதுவும் செய்யமுடியவில்லை. தமிழ்க்கட்சிகள் பார்வையாளர்களாகவே அங்கு இருந்தன. அந்த நிலைதான் அடுத்து வரும் காலங்களிலும் தொடரும்.

இந்த நிலையில் தமிழ் மக்களின் அபிலாசைகளை, அவர்கள் எதிர்பார்க்கும் தீர்வை தேசியகட்சிகளுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் எடுத்து விளக்கி தீர்வு முயற்சியை துரிதப்படுத்துவதற்காகவே இந்த அமைப்பை உருவாக்க முயன்றுள்ளோம் — என்றார்.

(இ-3)

## பிரான்சிஸ் அடிகள் நினைவு தினம்

கொழும்புத்துறை, டிசெ. 28

யாழ். குடாநாட்டில் உள்ள அனேக கிறிஸ்தவ தேவாலயங்களில் நாளை புதன்கிழமை காலை பிரான்சிஸ் அடிகள் நினைவு தினம் திருப்பலி, பூசை, வழிபாட்டுடன் நடைபெறும்.

(இ-30)

# 'ஓயாத அலைகள்-3' தாக்குதலில் உயிரிழந்த 13 புலிகள் விவரம்

விடுதலைப் புலிகளினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் 'ஓயாத அலைகள் — 3' தாக்குதலில் உயிரிழந்த 13 புலிகளின் பெயர் விவரங்களையும் 4 எல்லைக் காவல் படையினரின் விவரங்களையும் புலிகளின் குரல் வானொலி 27 ஆம் திகதி காலைச் செய்தியில் அறிவித்தது.

★ கனகராசா (ஞான முத்துஜெபநேசன்—ஓமந்தை)

★ புரட்சிமாறன் (நல்லதம்பி உதயகுமார் —யாழ்ப்பாணம்)

★ தீசன் அல்லது புவிவண்ணன் (சுந்தரலிங்கம் சிவராஜ் —யாழ்ப்பாணம்)

★ படைமுதல்வன் (ஜெயானந்தம் கெனடிசார்ள்ஸ்—முல்லைத்தீவு)

★ தமிழ்ப்பருதி (இருதயநாதன் டேவிட் கனிசியஸ்—யாழ்ப்பாணம்)

★ தயாபரன் (இராசலிங்கம் ஆறுமுகம்—நெடுங்கேணி)

★ கதிர்மகன் (நாகராசா பேரின்பராசா — யாழ்ப்பாணம்)

★ தங்கமாறன் (நடராசா ராஜ்குமார் — துணுக்காய்)

★ செம்பியனப்பன் (பெரியகறுப்பன் பாலகுமார் — உடையார்கட்டு)

★ வான்முகில் (சுப்பிரமணியம் ராஜகுமார்—விஸ்வமடு)

★ அமலன் (பொன்னுச்சாமி சந்திரமோகன் — முள்ளியவளை)

★ லெப்டினன் நிறைமதி (நவரத்தினராசா விஜிலோஜினி — வவுனியா)

★ ஆவர்ந்தனா (விநாயகமூர்த்தி தேவரஜனி — யாழ்ப்பாணம்)

### எல்லைப் படை

★ பொன்னம்பலம் சற்குணநாதன் (பூநகரி)

★ முத்துராசா தங்கேஸ்வரன் (பரந்தன்)

★ பாலசுப்பிரமணியம் விஜயகுமார் அல்லது விஜவின்— (யாழ்ப்பாணம்)

அதேசமயம் —

கடந்த ஜூலை மாதம் 13 ஆம் திகதி ஒலுமடுப் பகுதியில் படையினருடன் ஏற்பட்ட மோதலில் சுடர் (இராமலிங்கம் பத்மராஜா — நுவரெலியா) உயிரிழந்ததாகவும்புலிகளின்குரல்அறிவித்தது

# புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைக்க ரணிலினால் தான் முடியும்

## வரதராஜப்பெருமாள் கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 28

விடுதலைப் புலிகளுடன் நல்ல புரிந்துணர்வைக்கொண்டுள்ள ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் மட்டுமே விடுதலைப்புலிகளை பேச்சு மேடைக்கு கொண்டு வர முடியும்.

இப்படிக் கூறுகிறார் வடக்கு — கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், ஈ. பி. ஆர். எல்.எவ். அமைப்பின் பிரமுகருமான அ. வரதராஜப் பெருமாள்.

கொழும்புச் செய்தி வட்டாரங்களுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது —

விடுதலைப்புலிகளுடன் நல்ல புரிந்துணர்வைக் கொண்டிருப்பவர் ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தான். அவர் ஒருவரால் மட்டுமே இன்றைய நிலையில் புலிகளை பேச்சு மேசைக்குக் கொண்டுவர முடியும்.

இந்தப்பங்கை அவர் வகிப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்கு விரைவான தீர்வைக் காணமுடியும் என நம்புகிறேன் — என்றார்.

(இ-3)

## சுன்னாகத்தில் 2 கடைகள் உடைக்கப்பட்டுத் திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 28

சுன்னாகம் பகுதியில் இரு கடைகள் கடந்த வியாழனன்று ஊரடங்கு நேரத்தில் உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கே. கே. எஸ். வீதி, சுன்னாகத்தில் உள்ள மருந்தகம் ஒன்றின் பின் பக்கக் கூரையைப் பிரித்துக்கொண்டு உள் இறங்கிய திருடர்கள் அங்கிருந்து மருந்துப் பொருள்களையும் பால்மா வகைகளையும் திருடிச் சென்றுள்ளனர். இவற்றின் பெறுமதி ரூபா ஐம்பதாயிரத்துக்கும் அதிகம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சுன்னாகம் சந்தைப் பகுதியில் உள்ள பல சரக்குக் கடை ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்து அத்தியாவசியப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன. (இ-7)

## குருபூசை

கொழும்புத்துறை, டிசெ. 28

யாழ். குடாநாட்டில் உள்ள இந்து இளைஞர் மன்றங்கள், சமய நிறுவனங்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் நாளை புதன்கிழமை காலை ''இயற்பகை நாயனார்'' குருபூசை கொண்டாடப்படவுள்ளது. [இ-30]

## மிதிவெடியால் மக்கள் பீதி

அளவெட்டி வடக்கில் பொன்னிப்புலம் பகுதியில் உள்ள மிதிவெடிகளினால் அப்பகுதி மக்கள் பீதியுடன் நடமாடி வருகின்றனர்.

பொன்னிப்புலம் பகுதியில் தற்போது சுமார் 300 குடும்பங்கள் வரை மீளக்குடியமர்ந்துள்ளன.

இப் பகுதிகளில் பல மிதிவெடிகள் புதையுண்டு கிடப்பதாகக் கூறப்படுகிறது.

மிதிவெடிகள் அகற்றப்படாமையால் இப் பகுதி மக்கள் மிகுந்த அவதானத்துடன் நடமாட வேண்டி உள்ளது என்றும் கூறப்படுகிறது.

(இ-152)

## மூன்றாண்டு நினைவலைகள்



அன்னை மடியில்
19
04
1977

ஆண்டவன் அடியில்
30 — 12 — 1996

**அமரர் அருணாசலம் சிவச்செல்வன்**
(சிவா)

திதி: 28 - 12 - 99

மூன்று வருடங்கள் ஆனாலும்
ஆறாது எங்கள் மனம்
மாறாது எங்கள் துன்பம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

— குடும்பத்தினர்

காளிகோயில் வீதி, கொடிகாமம்.
T.P. 070 - 212747

(72057)

## புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

## கேள்வி கோரல்

எமது சங்கத்திற்கு விரைவில் வந்துசேர இருக்கின்ற 'அசோக் லெலண்ட்' ரக கொமட் சுப்பர் பார ஊர்திக்கு (புதிய லொறி) உடற்கோப்புச் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்வி கோர விரும்புவோர் சங்க நிபந்தனைகளுக்கமைவாக ரூ. 5000- ஐ கேள்வி வைப்புப் பணமாகச் செலுத்தி கேள்விப் பத்திரங்களைச் சங்கத்தில் பெற்றுக் கொள்ளல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை அரக்கு முத்திரை இடப்பட்ட பதிவுத் தபால் மூலம், தலைவர், புலோலி ப. நோ. கூ., சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்ற விலாசத்துக்கு 10 - 1 - 2000 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்**
**புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(சி/10346)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



காலஞ்சென்ற எமது அன்புத் தாயார்

**திருமதி கந்தப்பிள்ளை முத்துப்பிள்ளை**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு [28-12-1999] செவ்வாய்க்கிழமை (இன்று) முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். மேற்படி வைபவத்திலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

சோனெழு,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(72033)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலரப்போகும் 2000 ஆம் ஆண்டிலும் மகத்தான சாதனைகள் படைக்க வாழ்த்துகின்றோம்

மதுரகவி

**காரை. எம். பி. அருளானந்தன்**

(மக்கள் கவிஞரும் சிறந்த வர்ணனையாளரும்)

உலக கவிதைப் போட்டியால் உயர்ந்தமுதல் விருதுக்குரிய தமிழன்பர் மதுரகவி காரை. எம். பி. அருளானந்தன்ஆசிரியர் அவர்கள் எங்கள் தேவஸ்தானத்தில் இடம் பெற்ற மகாகும்பாபிஷேகத்தின் போது இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தின் உலக சேவையூடாக எமது கும்பாபிஷேக நிகழ்வுகளை சிறப்பாக வர்ணித்து அம் மக்களின் பாராட்டுக்களைப் பெற்றதோடு எமது தேவஸ்நானத்திற்கும் அம் மக்களிடமிருந்து பலவகையான ஆதரவுகளையும் தேடித்தந்துள்ளார், கவிதைப் போட்டியில் அவர் பெற்ற சிறப்பினை வாழ்த்தி மகிழ்கின்றோம்,

தேவஸ்தான பரிபாலன சபையினர்
சிற்பனை முருகமூர்த்தி ஆலயம்,
வேலணை.

(72103)

## ஒளிவிழா

யாழ்ப்பாணம், டிசெ. 28

தீவகக் கல்வி வலயத்தின் வருடாந்த ஒளிவிழா நிகழ்ச்சிகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு வேலணை வங்களாவடிச் சந்தியில் உள்ள சைவப்பிரகாச வித்தியாசாலையில் இடம் பெறவுள்ளது.

★ ★ ★

யாழ்ப்பாணம், டிசெ. 28

இருபாலையில் உள்ள கானான் ஜெய ஆலய ஒளி விழா நாளை 29 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும்.

நத்தார், புதுவருட நாள்களை முன்னிட்டு நாளை மறுதினமும் விசேட நிகழ்ச்சிகள் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

(இ)

## திருத்தப்படாத வீதி

நெடுந்தீவு, டிசெ. 28

வேலணை கிழக்கு அம்மன் கோயில் சாட்டி வீதி கடந்த பத்து வருடங்களுக்கு மேலாகத் திருத்தம் செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குண்டும் குழியுமாகக் காணப்படும் இந்த வீதியால் பயணம் செய்வதில் பொது மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இந்த வீதியில் உள்ள மதகுகளும் உடைந்த நிலையில் காணப்படுகின்றன.

(இ-7-111)

## வருடாந்த ஒன்று கூடல்

யாழ்ப்பாணம், டிசெ. 28

தீவகக் கல்வி வலயத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு வலய நிர்வாக உத்தியோகத்தர் செ. மெற்றாஸ் மயில் தலைமையில் நடைபெறும்.

சிறப்பு நிகழ்ச்சியாக வலயக்கல்வி அலுவலகக் கலைஞர்கள் பங்கு கொள்ளும் இசை நிகழ்ச்சி இடம்பெறும்.

வலயக்கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் இந்த ஒன்றுகூடல் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(இ-7)

## 2 பெண்கள் விசாரணையில்

ஒரு நாள் சிசுக்களை படுகொலை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இளம் பெண்கள் இருவர் அச்சுவேலி பொலீஸ் நிலையத்தில்தடுத்து வைக்கப்பட்டனர்.

புத்தூர் — வாதரவத்தைப் பகுதியில் உள்ள தோட்டம் ஒன்றில் இருந்து ஒருநாள் ஆண் சிசு ஒன்றின் சடலம் மீட்கப்பட்டதை அடுத்து 22 வயது யுவதி ஒருவரும் —

அச்சுவேலி — வேவிக்கிராமத்தில் உள்ள பற்றை ஒன்றில் இருந்து ஒருநாள் ஆண் சிசு ஒன்றின்சடலம்மீட்கப்பட்டதை அடுத்து 35வயதுடைய பெண் ஒருவரும்—கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

(இ-7-180)


கணக்கீடு
A/L 2000
DAY CLASS
திரு. S.D.J. சுதர்ஷன்
ஆரம்பம்:-
29 – 12 – 1999
புதன்கிழமை 9 மணி
(ப. நே.)
பொஸ்கோ
25, [illegible]
(72097)


## வாழ்த்து

40 வருடங்கள் அஞ்சல் திணைக்கள சேவையில்
யாழ். அஞ்சல் அத்தியட்சகராக
சீர்குலைந்த அஞ்சல் சேவையை பல இன்னல்கட்கு
மத்தியில் மக்கள் பலன் பெறுமளவிற்கு

சீராக்கிய சீமான்

**திரு. S. தர்மராஜன்**

ஒய்வு பெறும் இன்று அவரின் ஆளுமையையும், ஆற்றலையும் பாராட்டி பெருமகிழ்வுடன் உளமார வாழ்த்துகின்றோம்.

சாவா முகவர் தபால் நிலையம்,
100, கண்டி வீதி,
070-212248 சாவகச்சேரி.

(72115)

## நீங்காத நினைவுகளுடன் 6 ஆம் ஆண்டில்



| நிஜத்தினில் | நினைவினில் |
|---|---|
| 26 | 03 |
| 08 | 01 |
| 1968 | 1993 |

செல்வன் **இராசதுரை இராஜேஸ்வரன்**

திதி: 28-12-99

ஐயிரு திங்கள் சுமந்ததாயின் தவிப்பினிலே
மூவிரு வருடங்கள் ஓடி மறைந்த பின்னும்
மழலையாய் வந்தபின்னும் மறையவில்லை
அன்பு முகம்.
நின் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

நாவற்காடு,
அச்சுவேலி.

(72105)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 25 | 28 |
| — | — |
| 04 | 11 |
| — | — |
| 1914 | 1999 |

**திருமதி உமையம்மா சிதம்பரப்பிள்ளை**

கடந்த 28 – 11 – 1998 அன்று சிவபதமடைந்த திருமதி உமையம்மா சிதம்பரப்பிள்ளை அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், எமக்கு பல வழிகளிலும் உதவி நல்கியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இன்று (28 – 12 - 1999) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய சபிண்டீகரண நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
த. கதிர்காமநாதன்
குடும்பத்தினர்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

(71774)

## 31 ஆம் நாள் நீங்காத நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 | 28 |
| — | — |
| 04 | 11 |
| — | — |
| 1930 | 1999 |

**திருமதி பிள்ளையான் சரஸ்வதி**


கடந்த 28-11-99 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று ( 28–12–99 ) எமது இல்லத்தில் நடைபெறும். எமது தாயின் ஆன்ம ஈடேற்றத்தின் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் குடும்பசகிதம் வருகை தந்து கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''சரஸ்வதி வாசம்'',
மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

(72087)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**அப்பாக்குட்டி ஆறுமுகம்**

(இளைப்பாறிய இ. போ. ச. பரிசோதகர்)

| அன்னை மடியில் | அம்பாள் அடியில் |
|---|---|
| 10-10-1921 | 21-12-1997 |

திதி: 28-12-99

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

பத்தமேனி.

(72063)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பழைய கதை!

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைப்பு வழங்காவிடில் நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்துவோம். பொதுத் தேர்தலின் போது புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு அனுமதி தருமாறு மக்களிடம் ஆணை கேட்போம். பொதுத் தேர்தலில் ஒரு மேலதிக ஆசனம் கிடைத்தாலும் போதும். அதிகாரப் பரவலாக்கம் அடங்கிய புதிய அரசமைப்பை இயற்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்போம். —

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஆளுங்கட்சியான பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளர் அமைச்சர் டி.எம். ஜெயரத்தின.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குப்பலம் இல்லாமல், அரசாங்கத்தின் அதிகாரப்பரவல் தீர்வுப் பொதியை சட்டமாகவோ, அரசமைப்புத் திருத்தத்தின் ஓர் அங்கமாகவோ நிறைவேற்ற முடியாது என்பது ஏற்கனவே தெரிந்த ஒன்று. அதனாலேயே அரசாங்கம் தான் வகுத்த தீர்வுத் திட்டத்தைச்சட்டமாக்க முடியாது திணறியது.

இந்தத் தடங்கலை நீக்கும் பொருட்டே, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஆணை கேட்டே, ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டது. ஜனாபதிதித் தேர்தலில் ஆளுங்கட்சி வென்றால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்ற வாக்குறுதியுடனேயே அக்கட்சி சார்பில் சந்திரிகா குமாரதுங்கா போட்டியிட்டார்.

ஆனால் தீர்வு எவ்வாறு காணப்படும் என்பது ஜனாதிபதித் தேர்தல் வாக்குறுதியில் தெரிவிக்கப்படவில்லை. அதே வேளை ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்னர் அதிகாரப் பரவல் திட்டத்தை ஏற்பது குறித்தோ அல்லது அரசமைப்பை மாற்றுவது குறித்தோ ஐக்கிய தேசியக் கட்சி தனது முந்திய நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளும் என்பதற்கான உறுதிப்பாடு எதுவும் அக்கட்சியினாலும் வழங்கப்படவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் ஆளுங்கட்சி வென்றால், ஐக்கிய தேசியக்கட்சி தனது அணுகுமுறையை மாற்றிக் கொள்ளாவிடினும் தீர்வுப் பொதி நிறைவேற்றப்படும் என்ற தொனியிலேயே பிரசாரம் அமைந்திருந்தது.

ஆனால் இப்போது, ஐக்கிய தேசியக்கட்சி உதவாவிட்டால் நாடாளுமன்றத் தேர்தல், அதன் பின்னர் அரசமைப்புத் திருத்தம், அப்போதுதான் அதிகாரப் பரவல் திட்டம் அமுல் என்று ''பழைய கதை''யே பேசப்படுகிறது.

இந்தக் கதையின் அர்த்தம் தான் என்ன? இனப்பிரச்சினைக்குப் புத்தாயிரம் ஆண்டிலும் ஒரு தீர்வு கிடைப்பது சந்தேகம் என்பதே ஆகும். ஜனாதிபதித்தேர்தலில் ஆளுங்கட்சி வென்றால், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண உதவுமாறு ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சொல்லுங்கள்; அதற்காகவே வாக்களிக்கிறோம் என்று கூறுங்கள். = என மக்களிடம் தேர்தல் வேளையில் கேட்டிருக்க வேண்டும்.

அவ்வாறன்றி, தமது வேட்பாளர் மீண்டும் பதவிக்கு வந்தால் இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு விடும் என்று வாக்குறுதி அளித்துவிட்டு, ஒரு வாரத்திற்குள்ளேயே 'பழைய குருடி கதவைத் திறவடி' என்று முந்திய நிலைக்குத் திரும்புவது மக்களை ஏமாற்றுவதாக மட்டுமன்றி, இயலாமையையும் வெளிப்படுத்துவதாகும்.

# தேசிய அரசு அமைத்தால் இ. தொ. கா. ஆதரவு தரும்

கொழும்பு, டிசெ. 28

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வசதியாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஐ.தே.கவும் தேசிய அரசாங்கம் அமைக்க முன்வந்தால் அதனை நாம் ஆதரிப்போம் என்று இ.தொ.கா. நாடாளுமன்ற உறுப்பினர் பி. யோகராஜன் தெரிவித்தார்.

''நாட்டின் தேசிய பிரச்சினையாக விளங்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதில் இரு பெரும் கட்சிகளும் தடையாக இருந்து வந்துள்ளன.

''இந்தப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண்பதற்காக இரு கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க முன்வந்துள்ளதை நாம் வரவேற்கிறோம்.

''எமது கட்சியின் தலைவரும் அமரருமான எஸ். தொண்டமான் இதே கோரிக்கையை நீண்ட காலமாக வலியுறுத்தி வந்தார்.

''இந்தக் கோரிக்கையை இன்று இரு பெரும் கட்சிகளும் ஏற்க முன்வந்துள்ளதையிட்டு மகிழ்ச்சி அடையும் நாம் அந்த முயற்சிக்கு முழு ஆதரவையும் வழங்குவோம் —

இப்படி யோகராஜன் மேலும் தெரிவித்தார்.

(இ-3-சி)

## அயடீன் கலந்த உப்பு

வலிகாமம்தெற்கு, டிசெ.28

சுகாதாரப் பகுதியினரால் அங்கீகரிக்கப்பட்ட பைக்கெட்டில் அடைக்கப்பட்ட அயடீன் கலந்த உப்பையே விற்பனை செய்யுமாறு விற்பனையாளர்களுக்கு சுகாதாரப் பகுதியினரால் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

அயடீன் கலக்கப்படாததும், பைக்கட்டுக்களில் அடைக்கப்படாததுமான உப்பை விற்பனை செய்ய வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(இ-152)

## வேலையற்ற பட்டதாரிகள் விவரம்; சங்கம் திரட்டி வருகின்றது

வலி.தென்மேற்கு, டிசெ.28

யாழ். மாவட்டத்தில் வேலையற்றிருக்கும் பட்டதாரிகளின் பெயர் விவரங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையை யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் ஆரம்பித்துள்ளது.

வேலையற்ற பட்டதாரிகளின் பெயர் விவரங்களை தேசிய வரவு — செலவுத் திட்டப்பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கும் நோக்குடனேயே தற்போது பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும்—

இதுவரை சங்கத்தில் பதிவு செய்யாத பட்டதாரிகள் அனைவரும் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்பாகத் தம்மைப்பதிவுசெய்துகொள்ள வேண்டும் என்றும்—

வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தலைவர் தி.சந்திரகாசன் தெரிவித்துள்ளார்.

(இ-7-185)

## பாடசாலைகளில் மலசலகூடங்கள்

வலிகாமம்தெற்கு, டிசெ.28

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளில் புதிய மலசல்கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் 28 பாடசாலைகளிலும், தீவக கல்வி வலயத்தில் 19 பாடசாலைகளிலும், தென்மராட்சிக் கல்வி வலயத்தில் 28 பாடசாலைகளிலும் மற்றும் வலிகாமம், வடமராட்சிக் கல்வி வலயங்களில் 31 பாடசாலைகளிலும் புதிதாக மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் ஜூலை மாதத்தில் பாடசாலைகள் ஆரம்பிக்கும் போது இம் மலசலகூடங்களை மாணவர்கள் தமது பாவனைக்கு பயன்படுத்தக்கூடியவாறு விரைவாக வேலைகள் நடைபெற்று வருகின்றன.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினரால் ஏற்கெனவே ஐம்பது பாடசாலைகளில் உள்ள மலசல கூடங்கள் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன. (இ – 152)

## 18 பேருக்கு கண்ணாடி வில்லை

வலிகாமம்தெற்கு, டிசெ. 28

கண் பரிசோதனை முகாமின் போது விழிவெண்படலம் அகற்றும் சத்திர சிகிச்சைக்கு என தெரிவு செய்யப்பட்ட 18 பேருக்குத் தேவையான கண்ணாடி வில்லைகளை கொழும்பில் உள்ள கிராண்ட்பாஸ் கழகம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

மருதனார் மடத்தில் அமைந்துள்ள வட்டுக்கோட்டை விவசாயக் கல்வி நிறுவனத்தில் வசதி குறைந்தவர்களுக்காக நடத்தப்பட்ட கண் பரிசோதனை முகாமில் சுன்னாகம், உடுவில், இணுவில், உரும்பிராய்ப் பகுதிகளைச் சேர்ந்த 154 பேர் கண் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இப் பரிசோதனைகளின் போது 18 பேருக்கு விழிவெண்படலம் அகற்றி கண்ணாடி அணிய வேண்டிய நிலை காணப்பட்டது.

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் சுன்னாகம், உரும்பிராய் லயன்ஸ் கழகங்களுடன் இணைந்து இந்த கண்பரிசோதனை முகாமை ஏற்பாடு செய்திருந்தது.

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயத்தில் நடத்திய மற்றொரு கண் பரிசோதனை முகாமின் போது வறுமைக்கோட்டின் கீழ் உள்ள 25 பேர் கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டியவர்களாக கண்டறியப்பட்டனர்.

இவர்களுக்குத் தேவையான கண்ணாடி வில்லைகளையும் அன்பளிப்பாக கிராண்ட்பாஸ் லயன்ஸ் கழகம் வழங்கி உள்ளது.

அதே சமயம் —

மானிப்பாயில் உள்ள வாழ்வகத்தில் வசிக்கும் கண் பார்வை பாதிப்படைந்துள்ள ஐந்து பேரும், கண்பார்வைக் குறைவுடைய 15பேரும் இந்த முகாமில் கண்பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

மானிப்பாய் லயன்ஸ்கழகத் தலைவர் லயன் டாக்டர் உரோ மகேஸ்வரன் தலைமையில் செயற்றிட்ட இணைப்பாளர் லயன் எஸ்.எஸ். தங்கராசாவினால் நெறிப்படுத்தப்பட்ட இப்பரிசோதனைகளின் போது யாழ். போதனா வைத்தியசாலை கண் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். குகதாசன் கண்பரிசோதனையை மேற்கொண்டார்.

(இ-152)

## நாளை

மார்கழி 14

புதன்கிழமை

திதி: ஸப்தமி

பிற்பகல் 1.19 வரை

நட்சத்திரம்: உத்தரம்

மாலை 6.29 வரை

சுபநேரம்: 4.58— 6.28

ராகுகாலம்: 12.28— 1.58

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

இரகசியமாகப் பேசிக்கொள்ளப்படும் பேச்சும் உரத்த கூச்சலும் கேட்கத் தகுதியற்றவை.

சிசிரோ

## உருளைக்கிழங்குச் செய்கை பற்றிய விவசாயக் கருத்தரங்கு

புன்னாலைக்கட்டுவன், டிசெ. 28

புன்னாலைக்கட்டுவன் விவசாய சம்மேளத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட உருளைக்கிழங்கு செய்கை பற்றிய விவசாயக் கருத்தரங்கு கடந்த வியாழக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணி வரை நடைபெற்றது.

மேற்படி கருத்தரங்கில் விவசாய உத்தியோகத்தர், விவசாய திட்டமிடல் பணிப்பாளர், விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்.

உருளைக் கிழங்குக்கு சேதனப் பசளை பிரயோகிக்கும் முறை பற்றியும் கிருமிநாசனி விசிறும் முறைபற்றியும் விளக்கப்பட்டது.

மேலும் வெங்காயம், கோவா பயிர்களுக்கு ஏற்பட்டுள்ள புழுத் தாக்கத்துக்கு ''அம்புஸ்'', ''டெலசிட்' போன்ற கிருமிநாசனிகளைப் பிரயோகிக்குமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

மேற்படி கருத்தரங்கில் கலந்து கொண்ட உருளைக் கிழங்குச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தாம் உருளைக்கிழங்கை அறுவடை செய்யும்காலங்களில் கொழும்பில் இருந்து உருளைக் கிழங்கை இறக்குமதி செய்வதைத் தடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர்.

மேலும் இந்த வருடம் 'ஏஎப்' நிறுவனம் இறக்குமதி செய்த போஞ்சி விதைகள் முளைத் திறன் குறைந்தவை என்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

(இ-133)

## எதிரொலி..

- இடியன் -

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில், பல்லாயிரக் கணக்கான வாக்குகள் செல்லுபடியற்றவையாகக் காணப்பட்டனவாம்!

★ வாக்களித்துவிட வேண்டும் என்ற அவசரத்தில் வாக்கை அழித்துவிட்டார்களோ?

ஊனமுறுவோர் அதிகரிப்பதற்குக் கண்ணிவெடிகளே காரணமாம்!

★ அதாவது, சிலர் கால்களை இழப்பதற்குக் கண்ணிவெடிகளே கால்!

இரவு நேரத் திருட்டுக்களை ஒழிப்பதற்கு விழிப்புக் குழுக்கள் சில இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

★ நித்திரையும் திருடனைப் போல் வந்து அவர்களைச் செயலிழக்கச் செய்தால்...!

● புதிய ஜனாதிபதியாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட சந்திரிகா, நாட்டிலே சமாதானத்தை ஏற்படுத்தப்போவதாக வாக்குறுதி அளித்துள்ளார்!

★ சமாதானப்புறா சந்தோஷமாகப் பறக்குமா அல்லது வாக்குறுதி தான் காற்றில் பறக்குமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்!

மூவாயிரம் மெற்றிக் தொன் பொருள்களுடன் ''மாகோ'' கப்பல் காங்கேசன்துறைக்கு அண்மையில் கடலில் மூழ்கிவிட்டது.

★ எத்தனை ஆயிரம் பேரை அது கவலையில் மூழ்கடிக்குமோ?

● தேர்தலில் கள்ள வாக்குகள் போடப்பட்டன எனப் பரவலாகப் பேசிக் கொள்ளப்படுகின்றது!

★ இதை நினைத்துப் ''புளுகம்'' அடைபவர்கள் உளர்; புழுக்கம் அடைபவர்கள் பலர்!

● ஒருகோடி ரூபா பெறுமதியான வைரக் கற்களை விழுங்கிய இளைஞன் ஒருவன் மீனம்பாக்கம் விமான நிலையத்திற் கைது செய்யப்பட்டான்!

★ ''வைரமுடைய நெஞ்சு வேண்டும்'' என்ற பாரதியின் அறிவுரையைப் பின்பற்ற முயன்றானோ?

● பரிசளிப்பு விழா, விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றைப் பாடசாலை நாள்களில் நடத்தாமல் விடுமுறை நாள்களிலேயே நடத்த வேண்டும் எனக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் அதிபர்களுக்குக் கூறியுள்ளார்!

★ 'ரியூட்டரி'களிலே தான் அவற்றை நடத்த வேண்டியிருக்கும் என்கின்றார் ஓர் அனுபவசாலி!

● விற்பனைக்காகக் கசிப்பைக் களவாக எடுத்துச் சென்ற ஒருவர் இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார், கசிப்பு முழுவதும் தரையிலே ஊற்றப் பட்டது!

★ வாங்கிக் குடிப்பவர்களுக்கு மட்டுமல்ல, விற்பனை செய்பவர்களுக்கும் ஏற்படும் அனுபவம் 'கசப்பு'த்தான்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டோரின் விவரம்

யாழ்ப்பாணம், டிசெ.28

யாழ்.குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப் பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப் பட்டவர்களின் (இம் மாதம் 25 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு—

**சாவகச்சேரி**

(101516 ஏ),(101516 பி), (101516 சி), (126278 ஏ), (126278 பி), (126278 சி), (126301 ஏ), (126301 பி), (126301 சி), (126327 ஏ), (126327 பி), (126329ஏ), (126404 ஏ), )126413 ஏ), (126413 பி), (126418 ஏ), (126418 பி), [126439 ஏ), (126439 பி), (123672 ஏ), (126093 ஏ), (126093பி), (126093 சி), (134871 ஏ), (134871 சி), [134871 டி), 134871 பி).

**நெடுந்தீவு**

(10622ஏ), (12522ஏ), (12522பி), (12522சி), (12540ஏ),

**யாழ்ப்பாணம்**

(124645ஏ), (124645பி), (124645சி), (124645டி), (124645ஈ), (126680ஏ), (126680பி), (126680சி), (126681ஏ), (126681பி), (126691ஏ), (க26691பி), (126748ஏ), (126807ஏ), (127008ஏ), (128390ஏ), (133451ஏ), (133454ஏ); (133454பி), (133454சி), (133490ஏ).

(133519 ஏ), (133569ஏ), (133600 ஏ)‘ (133600 பி), (133600 டி), (13366 ஈ), (133657 ஏ)‘ (133668 ஏ), (133674 ஏ), (133674 பி), (133694 ஏ), (133694 பி), (133694 சி), (133694 டி), (133694 ஈ), (133694எவ்), (133694 ஜி), (133772 ஏ), (133780 ஏ),

**ஊர்காவற்றுறை**

(12210 ஏ), (12211 ஏ), (12212 ஏ), (12528 ஏ), (12558 ஏ), (12558 பி), (12561 ஏ), (12574 ஏ), (12592 ஏ), (12593 ஏ), (123149ஏ), (123149பி), (123149 சி), (123150 ஏ), (133133 ஏ), (133133 பி), (133133 சி), (133167 ஏ), (133167 பி), (133172 ஏ), (133172 டி), (133174 ஏ), (133174 பி), (133174 சி),

**மருதங்கேணி**

[0850103 ஏ],

**நல்லூர்**

(122931 ஏ),(122931 பி), (122948 ஏ), (122948 பி), (122996 ஏ), (124393 ஏ), (128215 ஏ), (133196 ஏ), (133196 பி), (133515 ஏ), (133594 ஏ), (133719 ஏ), (133719 பி), (133719 சி),

**பளை**

(0850102ஏ), (0850102பி)

**வேலணை**

(12431 ஏ), (12517 ஏ), (12565 ஏ), (12573 ஏ), (12580 ஏ), (12580 பி).

# வைத்தியர்கள் பற்றாக்குறை

வலி. கிழக்கு, டிசெ. 28

யாழ். போதனா வைத்திய சாலையில் தற்பே: து மார்புச் சிகிச்சை வைத்தியர் இல்லாமையால் நோயாளர்களும், வைத்தியபரிசோதனைசெய்ய வருபவர்களும் வைத்திய சாலைக்கு வந்து ஏமாற்றத் துடன் திரும்பிச் செல்வதாகக் கூறப்படுகின்றது.

இந்தக் கிளினிக்குக்கு நாளாந்தம் நோயாளர்களும், வைத்திய பரிசோதனைக்காக புதிதாக நியமனங்கள் பெற்ற ஆசிரியர்களும், சமுர்த்தி உத்தியோகத்தர்களும் அலைந்த வண்ணம் உள்ளனர்.

இங்கு கடமை புரிந்த தென்னிலங்கை வைத்தியர்கள் கொழும்பு சென்றதே இந்தப் பற்றாக்குறைகளுக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

(இ–180)

# வெற்றிடங்கள்

யாழ். மாவட்ட தபால் திணைக்களத்தில் 150க்கு மேற்பட்ட வெற்றிடங்கள் நிரப்பப்படா மலிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

10 முதலாம் தர தபாலதிபர்களுக்கும் 30 இரண்டாம் தர தபாலதிபர்களுக்கும் 100 சிற்றூழியர்களுக்கும் தபாலகங்களில் வெற்றிடங்கள் இருக்கின்றன. இதேவேளை யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச அஞ்சல் அத்தியட்சகருக்கு வாகன வசதி எதுவும் இதுவரைவழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(இ–5–9–10)

# ஜூஸ் பைக்கெட்டுக்கள் அழிப்பு

வலி. கிழக்கு, டிசெ. 28

உடுப்பிட்டிப் பகுதியில் பொதுச் சுகாதாரப் பகுதியினரிடம் அனுமதி பெறாமல் தயாரித்து விற்பனை செய்யப்பட்ட ‘ஜூஸ்’ பைக்கெட்டுக்கள் நீர்வேலி பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன.

இப்பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை திடீர்ப் பரிசோதனை நடத்திய பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடமே இவை சிக்கின.

(ஐ-180)


## லைடனின் மலிவு விற்பனை

லைடனின் வாடிக்கையாளர் நன்மை கருதி

**25 - 11 - 1999 முதல்**

**நத்தார் - புதுவருட மலிவு விற்பனை**

நடைபெற்று வருகின்றது என்பதனை அறியத் தருகின்றோம்.

★ எமது புடைவை நிலையத்தில் வாங்கும் ஒவ்வொரு புடைவைத் திணிசுகளுக்கும் விசேஷ கழிவு வழங்கப்படும்.

**லைடன் புடைவை நிலையம்**

**410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

T. P. 2381

(சி/10356)


## கண்ணீர் அஞ்சலி

எமது யாழ். பிரதேச செயலகத்தைச் சேர்ந்த தையல் போதனாசிரியை

செல்வி அ. அன்ரனிற்றா ரதினி

அவர்களின் தாயார்

திருமதி

**மற்றில்டா பொன்தவம் அல்பிரட்**

அவர்கள் 26 – 12 – 1999 அன்று காலமானதையிட்டு, மனம் கலங்கி நிற்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்,
நலன்புரிச் சங்கம்,
யாழ். பிரதேச செயலகம்.

(72130)

## 4th Death Anniversary



**Mr. A. R. RAJOO**

(முன்னாள் மதுவரி உதவி ஆணையாளர் வடபிராந்தியம்,
முன்னாள் தலைவர் Recreation Club சாவகச்சேரி,
முன்னாள் தலைவர் Vicemen கழகம் சாவகச்சேரி.)

BORN 1929-07-09

DIED 1995-12-28

We cannot bring the old days back
Your voice we cannot hear
But we treasure the sweet memories
Of you who loved us so dear

From your loving son
ROHAN SANJAY RAJOO (J.P.)
பொறுப்பதிகாரி, மதுவரித் திணைக்களம்,
தென்மராட்சி.
உதவிப் பொறுப்பதிகாரி,
திக்கம் வடிசாலை.
மதுவரித் திணைக்களம்,
பருத்தித்துறை.

TELEPHONE
Jaffna — 021 - 2226
Chava — 2212
No. 43, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

(சி/10352)

**கல்விக் கல்லூரி அனுமதி:**

# நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், டிசெ. 28

வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் தேசிய கல்விக் கல்லூரிக்ளில் 1999 ஆம் கல்வி ஆண்டுக்குரிய மாணவர்களை அனுமதிப்பதற்காகத் தகுதியான விண்ணப்பதாரிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் இறுதித் தொகுதி பெயர் விவரங்கள் இங்கு பிரசுரமாகின்றன.

**ஆரம்பக் கல்வி**

அரசரட்ணம் ஓரிவதனா — மீசாலை, திருஞானசம்பந்த பிள்ளை சிவகமல — கொக்குவில், சுந்தரம்பிள்ளை கவிதா — யாழ்ப்பாணம், தாமோதரம்பிள்ளை தாரகி — மிருசுவில் நமசிவாயம் சுமதி — மீசாலை, கனகசபை குமுதா — சாவகச்சேரி, நடராஜா கௌசல்யா — கைதடி, வடிவேல் உதயரேகா — யாழ்ப்பாணம், மகாலிங்கம் அனுசியா — குப்பிளான், வினாசித்தம்பி சிவானந்தினி — மீசாலை, நடராஜாலலிதா— அரியாலை,பாலசிங்கம் உதயமாலா — யாழ்ப்பாணம், சத்தியமூர்த்தி சத்தியபாமினி — கோண்டாவில், கணபதிப் பிள்ளைபாமினி—அச்சுவேலி, ராமசாமி நகுலேஸ்வரி — பண்டத்தரிப்பு, சிவபாதம் குமுதினி — சண்டிலிப்பாய் நடராசாஊர்மிளா —வரணி, செல்லத்துரை அருணா — தெல்லிப்பழை, இரட்ணசபாபதி சோபினி — நல்லூர், யோகானந்தராஜா பிரியதர்சினி — சுன்னாகம்,

தியாகராஜா ராஜினி — ஊர்காவற்றுறை, குமாரசாமி மங்களநாயகி — சாவகச்சேரி, நித்தியசிங்கராசா நந்தகுமாரி — கொடிகாமம், தில்லைநடராசா யசிதா — கந்தர்மடம், கனகசுந்தரம் முருகதர்சினி — கோப்பாய், சதாசிவம் பிரியந்தி —அச்சுவேலி, விஜயரட்ணம் புஸ்பலதா — மானிப்பாய், பாலசுப்பிரமணியம் ஜனதீபா — நல்லூர், சிவபாதசுந்தரம் மலர்விழி — மீசாலை, இந்திரன் கஜந்தினி —அரியாலை, ஜெகநாதன் வானதி — கொருடாவில், கிருஸ்ணபிள்ளை சாந்தினி — கரவெட்டி நடராஜா நளாயினி — யாழ்ப்பாணம், அருள்நிதி திவாகரமூர்த்தி — கொக்குவில், ஜெகஜோதி சுபாஜினி — சித்தன்கேணி, சிவமகராசா ஜமுனா — காங்கேசன்துறை, குமாரசாமி செல்வராணி — ஆனைக்கோட்டை, நித்தியரட்ணம் ஜெயவதி — வட்டுக்கோட்டை தம்பிநாயகம் நாகரஞ்சினி — இளவாலை, குமாரகுலசிங்கம் சுரேகா — காங்கேசன்துறை.

மகாதேவன் சுகந்தி — சுன்னாகம், இராசதுரை சுதர்சினி — வரணி, கனகரட்ணம் பிரதீபா — கொக்குவில், இளையதம்பி கஸ்தூரி — அச்சுவேலி, தம்பிராசா தர்சினி — புத்தூர், கந்தசாமி ஸ்ரீவதனி — ஏழாலை, பரமேஸ்வரன் ரஜினா — நீர்வேலி, செல்வராஜா தர்சினி — வேலணை, திருநாவுக்கரசு இந்திராணி —திருநெல்வேலி, ஏகாம்பரநாதன் கவிதா — சித்தன்கேணி, பேரின்பம் சுதர்சினி — பருத்தித்துறை, பத்மலிங்கம் சங்கீதா — புத்தூர், ஸ்ரீலோகநாதன் ஸ்ரீலட்சுமி—கைதடி, செல்லத்துரை அமுதா — தெல்லிப்பழை, விஸ்வலிங்கம் வசந்தநாயகி — சாவகச்சேரி, நவரட்ணராஜா சுஜாதா — மானிப்பாய், தங்கராஜா சிவப்பிரியா — அச்சுவேலி, குமாரசாமி அனுஷா — யாழ்ப்பாணம், கந்தசாமி சுபாஜினி — பருத்தித்துறை, கந்தசாமி அனுசாம்பிகை — பளை.

கணபதிப்பிள்ளை இந்துமதி — யாழ்ப்பாணம். வேதவனம் ரேணுகா — உடுப்பிட்டி, .தேவராஜா வினோதினி — காங்கேசன் துறை, வடிவேல் ரஜிதா — கைதடி, வல்லிபுரம் சுதர்சினி —யாழ்ப்பாணம், திருநாவுக்கரசு சுபாஜினி — சாவகச்சேரி,

சிவநேசன் பேரின்பம் — சித்தன்கேணி, முத்துலிங்கம் சுரேஷ்குமார் — தெல்லிப்பழை, நாகேஸ்வரன் சிவசங்கர் — சுன்னாகம், கணபதிப்பிள்ளை சீவரத்தினம் — வரணி, சோமசுந்தரம் கலாவல்லன் — மண்டைதீவு, கஜரோகுமார் சுகுமார் — மானிப்பாய், பெரியதம்பி இலம்போதரன் — தெல்லிப்பழை, சுப்பிரமணியம் கிருஷாந்தி — வரணி, மார்க்கண்டு வசந்தரூபன் — கரவெட்டி, விஜயரத்தினம் விஜயேந்திரா — சுன்னாகம், நடராஜா சிவாகரன்—காரைநகர், வரதராஜா பாலமுருகன்—கொக்குவில், குகதாசன் சுதர்ஜன் — நல்லூர், இராமநாதன் சங்கரன் — சண்டிலிப்பாய், .பரராஜசிங்கம் இராஜேஸ்வரன் — கந்தர்மடம், கே. விஜயகுமார் — அல்வாய், துரைராஜா கிருபாகரன் — சுன்னாகம் தெற்கு.

நடராஜா திருவாசகன் — வரணி, தம்பிநாயகம் நாகநாதன் — இளவாலை, கந்தசாமி ஈஸ்வரகுமார்—ஆனைக்கோட்டை, பசுபதி சிவானந்தன் — தாளையடி, வைத்திலிங்கம் யோகராஜா — இளவாலை, இராமகிருஷ்ணன் கிருஷ்ணமேனன் — இணுவில், முகுந்தன் கேசவ —சுழிபுரம், தேவநாயகம் பிறேம்நாத் — கல்வியங்காடு, விநாயகமூர்த்தி செந்தில்குமார்— தெல்லிப்பழை, பாலசிங்கம் செல்வவேல்—மீசாலை, கதிர்காமநாதன் அருந்தவநேசன் —யாழ்ப்பாணம், கணேசலிங்கம் சிறிரஞ்சித் —சுன்னாகம், சுந்தரம் சிவபாலன் — மிருசுவில், கந்தையா அனந்தகுமார் — காங்கேசன்துறை, சின்னத்துரை லதீஸ்வரன் — தாவடி, தர்மலிங்கம் வித்தியாதரன் — சாவகச்சேரி.

கிருஷ்ணபிள்ளை செல்வகுமார் — தெல்லிப்பழை, சிவபாதசுந்தரம் சிவகுமார் — உரும்பிராய், சின்னையா இராஜரத்தினம் — வரணி, சிவலிங்கம் முரளிதரன் — குப்பிளான், [illegible] குமார் — மிருசுவில், சின்னப்பொடியன் சிவேஸ் — நீர்வேலி.

(இ-க-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைத்தவர்கள் புதிதாக

# விசேட அடையாள அட்டைகளை பெறமுடியாத நிலை நீடிக்கிறது

யாழ்ப்பாணம், டிசெ. 28

தொலைந்துபோன விசேட அடையாள அட்டைகளுக்குப் பதிலாக புதிய அட்டைகளை வழங்குவதற்கு படைத்தரப்பு தொடர்ந்து மறுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1996 ஆம் ஆண்டுக்குப் பின் யாழ். குடாவில் வசிப்பவர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த விசேட அட்டையைத் தொலைத்தவர்கள் புதிதாக அதனைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதும், 1998 நவம்பர் முதல் தொலைந்த அட்டைகளுக்குப் பதிலாக புதிய அட்டைகளை வழங்கும் நடவடிக்கைகள் படைத் தரப்பினால் நிறுத்தப்பட்டுள்ளன.

தற்பொழுது ஒரு வருடம் கடந்த நிலையில் 350க்கும் மேற்பட்ட பொதுமக்கள் தொலைந்துபோன விசேட அடையாள அட்டைகளுக்குப் பதிலாக புதிய அட்டைகளைப் பெறமுடியாத நிலையில் இருந்து வருகின்றனர்.

விசேட அடையாள அட்டையைத் தொலைத்தவர்களின் நன்மை கருதி விசேட அடையாள அட்டை கருத்திட்ட முகாமையாளர் எஸ். திருலிங்கநாதன் யாழ். சிவில் அதிகாரியுடன் தொடர்பு கொண்ட போதும் பயன் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5-9-10)

# யாழ். மாநகர சபையின் வரவு செலவுத் திட்டம்

## சபைக் கூட்டத்தில் அங்கீகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ, 28

யாழ். மாநகரசபையின் இரண்டாயிரம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற சபைக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

பிரதிமேயர் என். ரவிராஜ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர். எல். எவ். ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 16 மாநகர சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

மேற்படி வரவுசெலவுத்திட்டம் சபையின் அங்கீகாரத்துக்கு விடப்பட்ட போது ஈ.பி.ஆர். எல். எவ். உறுப்பினர் இ. மங்களநேசன் இதற்கு எதிராக வாக்களித்தார்.

யாழ். மாநகர ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் உட்பட மாநகரசபை அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். (ஐ-5-9-10)


## கண்ணீர் அஞ்சலி

எமது மாணவி

காமலின் செறினா அல்பிரட்

அவர்களின் அன்புத்தாயார்

திருமதி மற்றில்டா பொன்தவம்அல்பிரட்

அவர்களின் மறைவையிட்டு கவலையுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,

மாணவர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள்

தாதிய பயிற்சிப் பாடசாலை,

யாழ்ப்பாணம். (72135)



## மரண அறிவித்தல்

### சபாபதிப்பிள்ளை செல்வரத்தினம்

காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகவும் சிவன் கோயில் வீதி, சித்தன்கேணியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை செல்வரத்தினம் 25-12-99 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் சபாபதிப்பிள்ளை-செல்லம்மா தம்பதிகளின் மூத்த மகனும் திரவியமலரின் அன்புக் கணவரும் செல்வராசா, செல்வநாயகி, செல்வராணி, செல்வேஸ்வரி, செல்வமலர், செல்வநாயகம், செல்வச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் வைத்தியநாதன், சாரதாதேவி, முருகமூர்த்தி, சுதாகரன், டர்முதா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 26-12-99 அன்று வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. செல்வநாயகம்
(மகன்)

இலகடி,
காரைநகர். (சி/10358)


# விளையாட்டரங்கு

# இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட்டில் ஆஸ்திரேலியா ஸ்திரமான நிலையில்!

## நேற்றும் மழையால் ஆட்டம் இடைநிறுத்தம்

மெல்போன், டிசெ, 28

ஆஸ்திரேலியாவின் மெல்போன் நகரில் இந்திய — ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று மழை காரணமாக ஆட்டம் இடைநிறுத்தப்படும் போது ஆஸ்திரேலிய அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 332 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்று முன்தினம் ஆஸ்திரேலிய அணி 138 ஓட்டத்துக்கு மூன்று விக்கெட்டுக்களை இழந்திருந்த நிலையில் மழை காரணமாக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. இதனால் நேற்றைய ஆட்டம் நேரம் முன்னதாகவே ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும் மழை காரணமாகத் தேநீர் இடைவேளையுடன் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. அப்போது ஆஸ்திரேலிய அணி— கில்கிறிஸ்ட், றிக்கிப் பொண்டிங் ஆகியோர் களத்தில் நிற்க — ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 332 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அணிக்காக மைக்கல் ஸ்லேற்றர் 91 ஓட்டங்களையும் கில்கிறிஸ்ட் 77 ஓட்டங்களையும் றிக்கிப் பொண்டிங் 59 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

இந்திய அணியின் பந்து வீச்சில் ஜவகர் சிறிநாத், வெங்கடேஷ் பிரசாத் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

காலநிலை சாதகமாக இருக்குமானால் இந்த டெஸ்டின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்று தொடரும்.

இப்போதுள்ள நிலையின் படி இந்த டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடியும் சாத்தியக் கூறுகளே உள்ளன. (ஐ-4)

# ஊழியர் தின விழா இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 28

யாழ். பல்கலைக்கழக ஊழியர்தின விழா இன்று காலை 9 மணி முதல் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருக்கின்றது.

ஊழியர் சங்கத் தலைவர் சி. கலாராஜ் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை கலந்துகொள்வார்.

விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகள் இந்த விழாவில் இடம்பெறும். (ஐ-3)

# மீனவருக்கு அனுமதி

குருநகர், டிசெ. 28

குருநகர் இறங்குதுறைப் பகுதியில் கடந்த 12 ஆம் திகதி முதல் விடப்பட்டிருக்கும் தமது கடற்றொழில் உபகரணங்களை மீனவர்கள் பார்வையிட படையினர் நேற்று அனுமதி வழங்கினர்.

இதையடுத்து அந்தப் பகுதி மீனவர்கள் இறங்குதுறைக்குச் சென்று தமது வள்ளங்களில் உட்புகுந்த நீரை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

நேற்று அந்தப் பகுதியில் அமைதி நிலவியதாக மீனவர்கள் தெரிவித்தனர். (ஐ-3-51-15)

# இளைஞர் உலகக் கிண்ண. கிரிக்கெட் போட்டி இலங்கையில்

கொழும்பு, டிசெ. 28

இளைஞர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித்தொடர் அடுத்த ஆண்டு ஜனவரி 10 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை இலங்கையில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டித் தொடரில் 16 உலக நாடுகளின் அணிகள் பங்குபற்றவுள்ளன.

இதற்கான 14 பேர் கொண்ட இலங்கை அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ-4)

## பி. பி. ஸியின் கருத்துக்கணிப்பில்

# சுனில் கவாஸ்கர் முதலிடத்தில்; பிராட்மன் பின்தள்ளப்பட்டார்!

லண்டன், டிசெ. 28

முடிவடைய இருக்கும் இந்த 20 ஆம் நூற்றாண்டின் சிறந்த கிரிக்கெட் வீரராக இந்தியாவின் சுனில் கவாஸ்கர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவரும் உலகப் புகழ் பெற்ற துடுப்பாட்ட வீரரும் ஆவார்.

லண்டன் பி.பி.ஸி நிறுவனத்தினால் கடந்த இருவாரங்களாக நடத்தப்பட்டு வந்த கருத்துக்கணிப்பின்படி கிரிக்கெட்டில் சுனில் கவாஸ்கர் முதலாம் இடத்தையும் சச்சின் டெண்டுல்கர் இரண்டாம் இடத்தையும்பெற்றுக்கொண்டுள்ளனர். கிரிக்கெட்டின் பிதாவென அழைக்கப்படும் ஆஸ்திரேலியரான டோன் பிரட்மன் இந்தக் கருத்துக் கணிப்பின்படி மூன்றாம்இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார். (ஐ-4)

# தென்னங்கன்று விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ. 28

ஊர்காவற்றுறைப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கும் வைபவம் நாளை புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச சபைத் தலைவர் ந. மதனராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் மற்றும் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஆகியோரும் கலந்து கொள்வர்.

இந்த வருடத்தில் இரண்டாவது தடவையாக தென்னங்கன்று வழங்கும் வைபவம் இடம்பெறுவதாகவும் —

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ. பி. டி. பியின் செயலாளர்நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா வழங்கிய விசேட நிதியில் இருந்து இந்தத்தென்னங்கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் —

ஊர்காற்றுறைப் பிரதேச சபைத் தலைவரும் ஈ. பி. டி. பியின் யாழ். மாவட்ட உதவி அமைப்பாளருமான ந. மதனராஜா தெரிவித்தார். (ஐ-7)

# கூட்டுறவு உத்தியோகத்தர் பதவி; 18 பேருக்கு இங்கு நியமனம்

அரியாலை, டிசெ. 28

யாழ். மாவட்டத்தில் 18 பேர் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கடந்த 23 ஆம் திகதி வழங்கப்பட்டதாக மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. சண்முகநாதன் தெரிவித்தார்.

கூட்டுறவுத் திணைக்களத்தால் பயிற்றப்பட்ட இந்த 18 உத்தியோகத்தர்களும் கூட்டுறவுச் சங்கங்களை மேற்பார்வை செய்யும் பணியில் ஈடுபடுவர். (ஐ-17)


ஆசையோடு கல்வி கற்க உங்களைத் தூண்டும்

அதிஉயர்ந்த ரக தாள்களில் தயாரிக்கப்பெற்ற அப்பியாசக் கொப்பிகளை அதிகுறைந்த விலையில் தருகிறோம்!

போஸ்கோ BOASCO

STATIONER SPOT

50 வீத கழிவில் பாடசாலைப் பைகள் (SCHOOL BAGS)

இந்த வாரம் மட்டுமே இந்த விசேஷம்!

இல. 3, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி/10360)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரிழந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

* புஸ்பகரன் (சதாசிவம் வேலாயுதம் - மட்டக்களப்பு)
* நடுவன் (பூபாலபிள்ளை சதீஸ்குமார் - மட்டக்களப்பு)
* சுவர்ணப்பிரியன் (வன்னியசிங்கம் ரஞ்சன் - மட்டக்களப்பு)
* கிருஷ்ணமாறன் (கோவிந்தசாமி கனகசபை - மட்டக்களப்பு)
* மாரியாளன் (மாரியாள் சௌந்தரராஜா - மட்டக்களப்பு)
* ரேகதீபன் (ஏகாம்பரம் யோகராசா - மட்டக்களப்பு)
* கமலவதனன் (சுந்தரராஜன் சுதாகரன் - அம்பாறை)
* தமிழ்மாறன் அல்லது மனோராஜ் (கணேஷ் சிவகுமார் - அம்பாறை)
* லெப்டினன் வல்லான் (அன்ரன் பெனடிக் சதீஸ்றொபேட் - முல்லைத்தீவு)
* கப்டன் கண்ணன் (பாலசுப்பிரமணியம் பிரதீபன் - யாழ்ப்பாணம்)
* மேஜர் தீபன் (மயில்வாகனம் ராமதாஸ் - யாழ்ப்பாணம்)
* எல்லைப்படை வீரர் சிவப்பிரகாசம் பாலகிருஷ்ணன் (யாழ்ப்பாணம்)

## தாழையடி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பம் தெரிவித்தனர் என்றும் -

ஆனால் அவர்கள் அந்தப்பகுதிகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படாததை அடுத்து அனைவரும் தாழையடி அரசினர் மருந்தகத்தில் தங்க வைக்கப்பட்டனர் என்றும் -கூறப்பட்டது.

இந்த மக்களை அவர்கள் விரும்பிய இடங்களுக்குச் செல்ல அனுமதிக்குமாறு பலதரப்பினரும் கோரிவந்தனர். இதைதொடர்ந்து அவர்கள் விரும்பிய இடங்களுக்குச் செல்ல நேற்று முன்தினம் மாலையில் அனுமதிவழங்கப்பட்டது. (ஐ-3-117)


IIS
INSTITUTE OF INFORMATICS STUDIES

5000

மாணவர்களுக்கான
மாபெரும்
புலமைப்பரிசில் திட்டம்

மேற்படி திட்டத்தின் கீழ் விண்ணபித்த
விண்ணப்பதாரிகளுக்கான
அறிவுறுத்தல்

- போட்டிப் பரீட்சை இடம் பெறும் திகதி :- 20-01-2000
- பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் 15-01-2000 -தொடக்கம் அனுப்பி வைக்கப்படும்.
- பரீட்சை முடிவுகள் வெளியிடப்படும் திகதி :- 01-02-2000
- பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படும் திகதிகள் :-
  05-02-2000
  14-04-2000
  14-09-2000

எதிர்வரும் கல்வியாண்டில் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும். மாணவர்களின் நலன் கருதி மூன்று பெரும் பிரிவுகளாக பயிற்சித் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. மாணவர்கள் தமது வசதிக்கேற்ப விரும்பிய காலப் பகுதிகளில் பயிற்சி நெறிகளில் இணைந்து கொள்ளலாம்.

31.12.99 பின் எக்காரணம் கொண்டும் விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்படமாட்டாது என்பதை அறியத்தருகின்றோம்.

இப்புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் விண்ணப்பித்த அனைத்து மாணவர்களுக்கும் முற்றிலும் இலவசமான ஓர் அடிப்படை கணனிப் பயிற்சியொன்றினை நடத்த நிர்வாகம் முடிவு செய்துள்ளது. இது தொடர்பான விவரங்களை 05-01-2000 அன்று உதயன் பத்திரிகையினைப் பார்வையிடவும்.

100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
இயக்குநர்.
(C/10351)



# TRRO COMPUTER TRAINING CENTER

புத்தாயிரமாம் ஆண்டை வரவேற்க நாமும் தயாராவோம்

புதிய கணனிப் பயிற்சி நெறிகள் ஆரம்பம்

பாடசாலைக் கல்வியினைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கும் உயர் கல்விகற்கும் மாணவர்களுக்கும் அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் ஏற்றதான பகல் நேர, மாலை நேர, சனி, ஞாயிறு வகுப்புக்கள் உடன் ஆரம்பமாகின்றன.

- மிக நவீன Pentium III Multimedia கணனிகள்
- மேலதிக பயிற்சி நேரம்
- முற்றிலும் குளிரூட்டப்பட்ட பயிற்சி அறை
- அனுபவம் வாய்ந்த பயிற்சியாளர்கள்
- மிகக் குறைந்த பயிற்சிக் கட்டணம் மற்றும் சலுகைகள்
- விசேட பயிற்சி நெறிகள்

வெற்றிகரமாக 2வது ஆண்டில்

எமது பயிற்சி நெறிகள்

1. Diploma in Microsoft Office 2000
2. Children's Course
3. Certificate Courses are
   - Ms Word 2000
   - Ms Excel 2000
   - Ms Access 2000
   - Ms Power Point 2000
   - Pascal
   - Dbase III+
   - C/C++
   - Visual Basic 6.0
   - Coral Draw

பயிற்சி நெறி ஆரம்பம்: 02 . 01 . 2000

சுய விவரங்களுடன் மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன் எமது அலுவலகத்துடன் நேரிலோ அல்லது கடிதமூலமோ தொடர்புகொண்டு பதிவினை மேற்கொள்ளலாம்.

நிர்வாகம்
TRRO கொம்பியூட்டர் பயிற்சி நிலையம்.
4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 2416
(C/10359)



# JAFFNA TECHNICAL INSTITUTE

JAFFNA - SRILANKA

Reged No :- 15251 T.P No :- 021-3335

COMPUTER COURSES

- **DIPLOMA IN MS OFFICE**
  WINDOWS 95/98 | MS ACCESS 97/2000
  MS WORD 97/2000 | MS POWER POINT 97/2000
  MS EXCEL 97/2000 | MS OUT LOOK 97/2000
  COURSE FEE 6000/= Duration 6 Months
- **CHILDRENS PROGRAMMING (14 - 19 YEARS)**
  INTRODUCTION | MS EXCEL 2000
  STRUCTURE OF A COMPUTER | PRINCIPLES OF COMPUTER
  MS WORDS 2000 | GAMES AND DRAWING
  COURSE FEE 2500/= Duration 3 Months
- **ELECTRICAL ELECTRONIC ENGINEERING TECHNICIAN DIPLOMA**
  ENGINEERING SCIENCE AND CIRCUITS , POWER, ELECTRONIC
- **SPECIAL ENGLISH CLASSES**
  NCE, English Language G.C.E. A/L 2000/2001

தொழிற் பயிற்சிகள்

100 மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு

யாழ். மாவட்டத்தில் கடந்த 20 வருடங்களாக பல்வேறு தொழிற் பயிற்சித் துறைகளில் பயிற்சியளித்து வரும் எமது நிறுவனம் "மிலேனியம்" ஆண்டில் பயிற்சி பெறும் 100 மாணவர்களுக்கு பயிற்சி முடிவில் ரூபா **5000/=** சம்பளத்தில் வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பயிற்சி நெறிகள்

**RADIO. T.V AND VIDEO DECK REPAIR ING DURATION 9 Months**
சகல இன Radio, T.V, Video deck மற்றும் சகல இலத்திரனியல் உபகரணங்களும் திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சி அளிக்கப்படும்.

**MOTOR REWINDING AND ELECTRICAL WIRING DURATION 6 Months**
சகலஇன MOTOR, FAN, TRANSFORMER என்பன REWINDING அசய்யும்முறை, மற்றம் வீட்டு மின் இணைப்பு முறை என்பன பயிற்சியளிக்கப்படும்.

**MOTOR CYCLE MECHANIZM DURATION 6 Months**
சகல இன MOTOR CYCLE, WATER PUMP என்பன திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.

**AIRCONDITIONING AND REFRIGERATION DURATION 6 Months**
சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் Air Condition திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.

புதிய பயிற்சிகள் ஆரம்பம்
கிழமை நாள்களில் 5-1-2000
சனி, ஞாயிறு நாள்களில் 8-1-2000

Note:- அனைத்துப் பயிற்சி நெறிகளுக்கும் மாணவர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது. உங்கள் அனுமதியை முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

மேலதிக விவரங்களுக்கு நேரில்!

தலைமையகம்
J.T.I
NO:- 52/1, STANLY ROAD,
JAFFNA..

கிளை நிறுவனம்
J.T.I
NO:- 07, PALALY ROAD,
JAFFNA..

(72024)
DIRECTOR



# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
26 ஆண்டுகளாக கலை, வர்த்தக மாணவர்களுக்கு
சிறந்து பெறுபேறுகளைப் பெற்றுத் தரும்
ஒரே நிறுவனம்!

**A/L 2002**
கலை, வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம் 09-01-2000
9.00 மணி (காலை)

* அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும் *
(72084)



# DCS JAFFNA

Special Junior Diploma For
G.C.E (O/L)Students

க.பொ.த (சாதாரணதரம்) மாணவர்களுக்கான
விசேட கணனிப் பயிற்சி நெறி

The above Diploma Course will Commence on Saturday 1st January 2000. Students who wish to follow this course should register immediately. They can choose to follow the class that begins at 8.00 a.m. or 1.00 p.m. (new time). For further details contact the undersigned.

Director (Ad)
DCS
124/2, Palaly Road,
Thirunelvely.

P.O. Box No 144, Jaffna
T.P 021-2604
(72027)



# படக் கலண்டர்கள்

கொம்பிளிமெண்ட் அடித்துக் கொடுக்கக்கூடிய
சீனறி, சினிமா, பக்திப் படங்களுடன் கூடிய கலண்டர்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனையாகிக்
கொண்டிருக்கின்றன.

உங்கள் தெரிவுக்கு

பட்டாபி படமாடம்

64, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
(C/10357)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தி னரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியர் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28-12-1999இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org